www.tamilarangam.net

# வெளிச்சம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE, FRANCE



ஜனம்-2 ஒகஸ்ட்-செப்டம்பர் - 89 குரல்-3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மலையகம் எங்கள் பூமி!**
**நாம் இங்கேயே வாழ்வோம்!!**



# குறிஞ்சிக் குமுறல்கள்

பழ - கருப்பையா

குடும்பச் சுமைகளையும் வேலைப்பளுவையும் சுமந்து விழி பிதுங்கி நிற்கும் மலையகப் பெண் தொழிலாளர்களுக்கு பிரசவகாலத்தில் கூட வழங்கப்பட வேண்டிய சலுகைகள் உரிமைகள் மறுக்கப்பட்டு வருவது பெரும் வேதனைக்குரியதாகும்.

அரச துறையில் வேலை செய்யும் பெண்களுக்கு மூன்று மாத சம்பளத்துடனான விடுமுறை வழங்கப்படுகிறது. 1978ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 13ம் இலக்கத் திருத்தச் சட்டப்படி இலங்கையில் வேலை செய்யும் அனைத்துப் பெண்களுக்கும் இம் மூன்று மாதசம்பளத்துடனான விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

ஆனால் மலையகத்தில் அரசாங்க வைத்தியசாலையில் பிரசவம் நடந்தால் மருத்துவச் சேவைக் கென்று ஏழில் மூன்று பகுதி பணத்தை பிரசவ சகாய நிதியிலிருந்து கழித்துக் கொள்கிறார்கள். இது சில வேளைகளில் மருத்துவ மனையில் அல்லது தலைப்பிரசவத்திற்கு தாய்வீடு சென்று பிரசவம் நடந்தாலும் இப்பணத்தைக் கழிக்கிறார்கள். ஒரு பிரசவித்த தாய் மருத்துவமனையில் பத்து நாட்கள் தங்கலாம். ஆனால் மலையக மருத்துவமனையில் மூன்று நாட்களில் அனுப்பிவிடுகிறார்கள். மலையகப் பெண் தொழிலாளர்களுக்கு ஏனிந்தப் பாகுபாடு? இவர்களுக்கு மூன்று மாத விடுமுறையும் சம்பளமும் பெற வழி செய்ய முற்போக்கு சக்திகள் மலையக மக்கள்பால் அக்கறை உள்ளவர்கள் முன்வர வேண்டும்.

www.tamilarangam.net

# எமது எண்ணங்கள்

அமைதியற்ற நிலையில் அராஜகங்களின் நடுவில் தமது மூச்சை விடக் கூட மற்றவர்களின் அனுமதி பெற வேண்டிய சங்கடத்தில், இருள் சூழ்ந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு பேராபத்து ஒன்று காத்திருக்கிறது.

வடக்கு கிழக்கிலிருந்து அமைதிப்படையை அகற்றி விட்டு, தம்மிடம் சரணடைந்துள்ள இயக்கங்களிடம் ஆயுதங்களை வாரி வழங்கி இயக்க மோதல்களை தூண்டி விட்டு, மீண்டும் இரத்த ஆறு ஓட வைத்து தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைமைகளை சின்னாபின்னப்படுத்தி அழித்து, தமிழ் பேசும் மக்களை அரசியல் அனாதைகளாக்கும் திட்டமிட்ட சதியொன்று பிரேமதாசாவினால் உருவாக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணி திட்டமிடப்பட்டு பலவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. எஞ்சி உள்ள ஜனநாயகம் விரும்பும் அரசியல் தலைமைகளை அழிப்பதன் மூலம் தமிழ் பேசும் மக்களை அரசியல் அனாதைகளாக்கி தன்னிடம் சரணடைய வைக்க முயற்சிக்கும். பிரேமதாசாவின் இக்கபட நாடகத்திற்கு துணைபோகும் இயக்கங்களை, அரசியல் கட்சிகளை, இனம் கண்டு நிராகரித்து தமிழ் பேசும் மக்கள் தமது எதிர்காலத்தை பேராபத்திலிருந்து காத்துக் கொள்ள முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மலையகத்தில் அடிக்கடி ஏற்படும் ஹர்த்தால்

www.tamilarangam.net

காரணமாக வேலைக்குப் போக முடியாத நாட்களிற்கு சப்ரகமுவ மாகாணத்திற்கு உட்பட்ட தோட்ட பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட வேண்டுமென சப்ரகமுவ மாகாண சபையில் ஜ. சே. மென்ணியால் கொண்டுவரப்பட்ட பிரேரணை மாகாண சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதை பெரிதும் வரவேற்கிறோம். இது எழுத்தளவிலில்லாது நடைமுறையில் வர சம்பந்தப்பட்ட அனைவரும் ஆவன செய்ய வேண்டும்.

மலையகத்தில் தேயிலை உற்பத்தி வீழ்சிக்கான சரியான காரணத்தை கண்டறிந்து பரிகாரம் தேடாது, ஏற்கனவே வாழ்க்கைச் செலவினத்துடன் வருமானத்தை சரிக்கட்ட முடியாது, எதிர்நீச்சலடித்துக் கொண்டிருக்கும் அப்பாவி தொழிலாளர்களின் வேலை நாட்களை குறைப்பதே தேயிலை உற்பத்தி வீழ்ச்சியை சரி செய்ய பரிகாரம் எனப்புறப்பட்டுள்ள முதலாளித்துவ அரசின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசு வேலை நாட்களை குறைக்க அரசுசார்பு மலையக தொழிற்சங்கங்களும் மந்திரிகளும் தாம் போராடிப் பெற்று தருவதாகப் புறப்படவுள்ள கண்ணாம்பூச்சி விளையாட்டில் மலையகமக்கள் மயங்கிவிடாது தடுக்க முற்போக்கு சக்திகள் முன் வர வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் அனைத்து அரசியல் பிரச்சனைகளும் சிக்கல் மேல் சிக்கலாகி வளர்ந்து வருவதற்கு நமது அரசியல் தலைமைகள் மத்தியில் உள்ள ஐக்கியமின்மையே மூலகாரணம் என்பது யாவரும் அறிந்த ஒன்று. பலமுறை ஐக்கியத்துக்கான அடித்தளங்கள் உருவாக்கப்பட்டன. பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. ஒரு சில ஐக்கிய முன்னணிகள் கட்டப்பட்டன. 83ம் ஆண்டுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி அமைக்கப்பட்டது ஒரு ஐக்கிய அம்சமாகும். பின்பு ஆயுதப் போராட்ட

www.tamilarangam.net

காலத்தில் கூட்டணி பலவீனமடைந்து போகவே, இயக்கங்கள் மத்தியில் ஐக்கியத்தின் முக்கியம் உணரப்பட்டு ஈழத் தேசிய விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டு குறிப்பிடத்தக்க பங்காற்றியது. அரசியல் சூழ்நிலைகளாலும் அராஜக அட்டகாசத்தாலும் இம் முன்னணி உதிர்ந்து போனது. இன்று மீண்டுமொரு முயற்சியாக இன்றைய அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப **தேசிய சபை** என்னும் பெயரில் ஐக்கிய முன்னணி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளதை நாம் வரவேற்கிறோம்.

தேசிய சபை ஒரு முழுமையான ஐக்கிய முன்னணியா என்ற கேள்வியையும், இது ஒரு பம்மாத்து என்னும் வழமையான ஒப்பாரிகளையும், இம் முன்னணி உருப்பெறுமா நடைபெறுமா என்னும் ஐயப்பாடுகளையும் ஒரு புறத்தில் வைத்துவிட்டு, இன்றைய சூழ்நிலையில் அதிமுக்கிய தேவைக்கான இம் முயற்சியை வலுப்பெற வைக்க வேண்டியது தமிழ் பேசும் மக்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக இன்றுள்ள பாரிய பொறுப்பாகும்.

**10. 6. 89** வடகிழக்குப் பகுதியில் இலங்கை இராணுவ முகாம்கள் விஸ்தரிப்பு செய்யப்படுவதோடு மட்டுமல்லாது புதிய இராணுவ முகாம்களும் அண்மையில் தோன்றியுள்ளன. குறிப்பாக கிழக்குப் பகுதியில் இலங்கை இராணுவத்தினரும், அதிரடிப் பொலிசாரின் நடமாட்டமும் கூடுதலாகவுள்ளது. 300 பொலிசார் இருந்த இடத்தில் இப்போது 1300 பொலிசார் உள்ளனர். 32 இராணுவ, பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறையில் சிதம்பரா கல்லூரிக்கு அருகாமையில் உள்ள இலங்கை இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டு மேலதிகமான இராணுவத்தினர் ஹெலிகொப்டர்கள் மூலம் கொண்டு வரப்பட்டு அதனைச் சுற்றி பல சென்றிகள் அமைக்கப்பட்டுள்ளது.

நன்றி பாலம்

www.tamilarangam.net

# ஒப்பந்தம் ஒரு கண்ணோட்டம்

அரசின் இராணுவக் கெடு பிடிகளாலும் இயக்கங்களின் அராஜக நடவடிக்கைகளாலும் அமைதியை இழந்து பசி பட்டினி யோடு போராடிய மக்களுக்கு ஒப்பந்தம் என்ற போர்வையில் உணவுப் பார்சல்களுடன் இந்தியா உள்ளே வந்து வருடங்கள் நீண்டு இரண்டையும் தாண்டிவிட்டன. ஆனால் ஒப்பந்தத்தின் எதிர்பார்ப்புக்களின் பலன்களில் இந்திய அரசு, இலங்கையரசு, தமிழ் பேசும் மக்கள், சிங்கள மக்கள், இயக்கத் தலைமைகள் என்பன அடைந்தவைகள் எவை? உண்மையாக இலாபம் பெற்றவர்கள் யார்? ஏன் தமிழ் தேசிய இனத்திற்கு அமைதி கிட்டவில்லை இக் கேள்விகள் உங்கள் சிந்தனைகளைத் தொடாமலிருக்க முடியாது.

எல்லோருடைய எதிர் பார்ப்புக்களுமே அமைதி தான் ஆனால் அது அவரவர்களின் நிலைகளுக்கு ஏற்ப அதன் தல மைகளிலும் தாற்பரியங்க லும் வேறுபடுகின்றன. இந்தி யாவின் நிலைப்பாடும், இலங் கையில் நிலைப்பாடும், அரச த விய சார்பு நிலையிலும் இய கங்கள் அரசியற் தலைமைகள் என்பவைகள் அவரவரின் அ சியல் இராணுவ ஆயுத பரி ரங்களின் சார்பு நிலையிலும், ப களின் நிலையோ இருதலைக் கொ ள்ளிபோல் இவர்களின் தை களுக்கிடையில் நசுங்கிப் பு ங்கிப் பயந்து கொண்டு எ போது வரும் அமைதியென்று எதிர்பார்ப்பதாகும்.

இந்தியாவை எ துக் கொண்டால் தனது அர சின் வெளிநாட்டுக் கொள் கைக்கு ஏற்ப இந்து சமுத்திர

www.tamilarangam.net

பிராந்தியத்தை அமைதி வலயமாக்கவும், சர்வதேச ரீதியில் தனது இராணுவ பலத்தைக் காட்டிக் கொள்ளவும், இலங்கைத் தீவில் தனித்தனி இறைமையுள்ள இரு அரசுகள் பரிணமிப்பதைத் தடுத்துக் கொள்ளவும், இலங்கைக்கு உதவுகிறேன் என்ற தோரணையில் இலங்கையில் நடவடிக்கைகளில் தலையிட்டு அதன் மூலம் தனது நாட்டினுள் வெளிநாட்டுச் சக்திகளின் ஊடுருவல்களைத் தடுத்து, தமிழ் மாநிலத்தில் நிலை கொண்டிருந்த இயக்கங்களின் பிற்தளங்களை நீக்கி, தமிழ் நாட்டு மக்களின் அரசியல் நிலைமைகளுக்கும் அபிலாசைகளுக்கும் ஆப்பு வைத்ததுடன், இதையே இந்திய உபகண்டத்தின் பொதுப்பிரச்சினையாக்கியதில் வெற்றியும் கண்டு கொண்டது. அதே நேரத்தில் சுய நல நோக்குடன் பிழையான அணுகு முறைகளைக் கையாண்டு இயக்கங்களுக்குள் முரண்பாடுகள் வளர்வதற்கு தூபமிட்டதுடன், ஆயுதங்களைப் பறிப்பதற்குப் பதிலாக எல்ல அமைப்புக்களும் ஆயுதபாணிகளாகும் நிலையைத் திட்டமிட்டுச் செயற்பட்டது. மக்களுக்கு கிடைக்க வேண்டிய அமைதிக்குப் பதிலாக தனது இராணுவத்திற்கான அறுவடைகளைப் பெற்றுக் கொண்ட பேறுகளே அதிகம்.

அரசியல் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே பரிகாரம் என்ற இலங்கை அரசின் நலனை அணுகுமுறை இலங்கையின் இறைமையையும் தன்னாதிக்கத்தையும் இன்னொரு நாட்டின் இராணுவம் ஆக்கிரமித்ததை மூடி மறைத்து சிநேகபூர்வ ஒப்பந்தமாக்கி சட்ட வலுக்கொடுத்து, தனது தேசத்தின் பிரச்சினைக்குரிய பகுதியான வடக்கு கிழக்கில் தன்னாதிக்கத்தை இழந்து கொண்டதை வெளிக்காட்டாமல், இந்தியாவின் செலவிலேயே பாதுகாப்பை நிலைநாட்டி, தனது படைகளின் சேதங்களையும் செலவினங்களையும் தவிர்த்து, சிங்கள மக்களை பாதுகாத்துக் கொண்டதாக பறை சாற்றி ஆதரவு திரட்டிக் கொண்ட அரசியல் சாணக்கியத்தைப் போற்றியாக வேண்டும். இதுவே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வையும் ஒற்றையாட்சி அமைப்பிலேயே தீர்ப்பதென்ற யூ.என்.பி

www.tamilarangam.net

அரசின் நீண்ட காலக்கொள்
கையை வெற்றிபெறச் செய்த
மையும், தமிழ் தேசிய இனத்தின்
அரசியற் தீர்வுக்கு இணங்கிக்
கொண்டமையும், இலங்கையின்
வெளிநாட்டுக் கொள்கையில்
இந்தியாவின் நட்பு தவிர்க்க
முடியாத இடத்தை பெற்றுக்
கொண்டது. மேலும் ஒப்பந்தத்
தால் கொண்டுவரப்பட்ட சன
நாயக நீரோட்டத்திற்குள் இ
யக்கத்தலைமைகளையும் அரசியற்
தலைமைகளையும் இழுத்து இலங்
கை என்ற அரசை அந்தத்தலை
மைகள் மூலம் ஏற்கச் செய்
தது, இதில் கலக்காமல் ஒதுங்
கி நின்று இராணுவ நடவடி
க்கைகளைச் செய்து இலங்கை
யின் அமைதிக்குப் பங்கமேற்
படுத்திக் கொண்டிருந்த L.T.T.E
அமைப்பையும் தனது இலாப
த்தின் பொருட்டு இந்தியப்ப
டை வெளியேற்றத்திற்கு உத
வியாக நிபந்தனையற்ற பேச்சு
வார்த்தையின் மூலம் சரணடை
ய வைத்து, அவர்கள் மூலம்
தான் சாதிக்க எண்ணியிருப்
பவைகளைச் சாதிக்க முற்படும்
தன்மையும், ஒப்பந்தத்தால் ஏற்
பட்ட ஒரு புதிய சூழலும் இந்

தியாவைவிட இலங்கை அரசு
க்கு கிடைத்த வெற்றியுமாகும்.

அன்றும்சரி இன்
றும்சரி தமிழ் பேசும் மக்கள்
முற்று முழுதாக அமைதியையே
விரும்பி ஏக்கப் பெருமூச்சு வி
டுகின்றார்கள். இந்த அமைதிக்
கு உறுதுணையான பாதுகாப்பு
அதன் வழிப் பெறப்படும் சுத
ந்திரம் இவைகளின் அடிப்படை
யில் தோன்றக் கூடிய சுய
விருப்பிலான சனநாயக வழி
முறைகள், சுருங்கச் சொன்னால்
சட்ட ஆட்சியின் சிறப்புக்களை
யே எதிர்பார்க்கின்றார்கள். ஆ
த அராஜகத்தால் இழந்து
போயிருக்கும் இவைகளை இவ்
வொப்பந்தத்தின் மூலம் அடைய
லாம் என்ற அபிலாசையில்
இந்திய அமைதிப்படையை ஆ
ரவாரித்து வரவேற்றார்கள்.
ஆனால் ஒப்பந்தத்தின் காலகட்
டத்தில் இந்த ஆயுத அச்சுறுத்த
ல்களுக்கெதிரான பாதுகாப்புக்
கள் மக்களுக்கு அரசாலோ
அமைதிப்படையாலோ அன்றி
இயக்கங்களாலோ உத்தரவா
தப்படுத்தப் படவில்லை.

இந்நிலையிலும்
ஒப்பந்த அமுல் என்ற பெயரி

www.tamilarangam.net

மாநகரசபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பன நடந்தேறின. இவைகள் மக்கள் தம் சுயவிருப்பு வெறுப்புக்களைக் காட்டத் திறந்துவிடப்பட்ட ஜனநாயக நீரோட்டங்கள். ஆனால் ஆயுத அச்சுறுத்தல்களும் மரண பயங்கரங்களும் நிறைந்த சூழலில் அமைந்தமையால் மக்களின் எதிர்பார்ப்புக்கள் மழுங்கடிக்கப்பட்டன. மேலும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்களும் மாநகர சபையின் அதிகாரப் பரவலாக்கமும் சரியாக நடைமுறைப்படுத்தப் படாதபடியால் மக்கள் பங்கு கொண்ட ஜனநாயக நீரோட்டமும் வீணடிக்கப்பட்டதாகவே கருதப்படுகிறது. இவ்வளவு தூரம் ஏற்பட்ட போதும் மக்கள் போர் பிரகடனஞ் செய்யப்பட்ட யுத்தப்பிரதேசத்தில் வாழ்வது போலவே வாழ்வதால் மக்கள் எப்பலனையும் அடைந்தவர்களாகக் கூறமுடியவில்லை.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை இணைப்பான ஒரு தேசிய மனுநிலைக்கு அத்திவாரமாயும் அரசு இதைச் சரியாகத் தீர்த்தால் நாட்டினப் பிரச்சினை தீரும் என்ற நிலையில் ஒரு சாராரும், இந்தியாவிற்கு எமது நாட்டை விற்றுவிட்டார்கள் என்று ஒரு சாராரும், இந்த அமைதிகாக்கும் படைகளை ஆக்கிரமிப்புப் படைகளாக ஒரு பகுதியினரும் வெவ்வேறுபட்ட எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கையில் அரசியற் தலைமைகளும் தமது சார்புநிலைகளுக்கேற்ப இவைகளுக்கு தூபமிட்டன. இவ்வமைதிப்படையின் வருகையின் பின் கிழக்கில் இடம் பெயர்ந்த சிங்கள மக்கள் குடியேறினாலும் வடக்கில் ஏறவில்லை. எந்த நிலையிலும் இவ் அமைதிப்படை வடக்கு கிழக்கை விட்டு விஸ்தரிக்கப்பட மாட்டாதோ என ஐயுற்றார்கள். அமைதிப்படைக்கு முன்பு இருந்த மரண பயங்கள் அமைதிப்படை வந்தபின்பும் குறைந்தபாடில்லை. இந்திய எதிர்ப்பு எழுச்சி வளர்ச்சி கண்டுள்ளது. இதற்கு ஜனாதிபதியும் உடன்பாடுள்ளவராகவே காணப்படுகின்றார். ஆகவே இவ்வமைதி ஒப்பந்தம் அவர்களின் ஏகோபித்த எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கவும் இல்லை அவர்

www.tamilarangam.net

கள் நன்மை பெற்றார்கள் என்பதில்லை ஆனால் அரசபடைகளில் உள்ளவர்களுக்கு இழப்புக்கள் தவிர்க்கப்பட்ட உண்மை மறுக்கப்பட முடியாதது.

எந்தவொரு இயக்கமும் இந்த ஒப்பந்தத்தை தமிழ்த் தேசிய இனத்தின் இறுதித் தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. இயக்கங்களும் அரசியற் தலைமைகளும் தங்களின் சார்பு நிலைக்கேற்பவே ஒப்பந்த அமுலை சாதகமாக்க முயன்றன. இயக்கங்களின் எதிர்பார்ப்புக்கள் ஆரம்ப நிலைக்கும் இன்றைக்குமிடையில் வித்தியாசப்பட்டுள்ளன. இதற்கு அடிப்படை ஒப்பந்தம் சரியாக அமுல் படுத்தப்படாமையும் ஒரு காரணம். அதற்கு ஒத்துழைப்பு, எல்லா அமைப்புக்களையும் ஒன்றுபடவிடாது மரணக்குழிக்குள் புதைத்து விட்டது. விடுதலைப் புலிகளை பெரிய அமைப்பு என்ற மாயை இந்தியா கொண்டிருந்தபடியாலும் புலிகளுக்குக் கொடுக்கப்பட்ட அரசியல் சூழல்கள் உபயோகப்படாமல் போனதாலும் மற்றைய இயக்கங்களின் எதிர்பார்ப்புக்களும் இருளாக இருந்தது. இந்தியாவிற்கும்



விடுதலைப்புலிகளுக்குமான இடைப்பட்ட பகைமை முற்றியதாலும் இலங்கையின் அகச்சூழலில் அரசியல் மாற்றம் வேண்டியிருந்தாலும் இயக்கங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த பொது மன்னிப்பின் அடிப்படையில் திடமான ஜனநாயக மரபுகளைப் பேணும் அரசியல் வழிமுறைகளுக்குள் அமைப்புக்கள் தங்களைப் புகுத்தும் சூழல் உருவாக்கப்பட்டது. இத்தக்கட்டத்தில் EPRLF இன் அக்கினிப் பரீட்சை அவர்களே அவர்கள் எதிர்பாராத இடத்திற்கு திடீர் என்று உயர்த்திவிட்டது. இதைத் தொடர்ந்து உருவாகிய சந்தர்ப்பத்திலும் அவர்களும் ஏனைய அமைப்புக்களும் மக்களால் இனங்காணப்பட்டனர். அரசியல் கட்சிகள் என்றும் சட்டப்படி நிலைக்குத் தங்களை உயர்த்தியும் கொண்டனர். LTTE யினர் இதில் கலவாததால் இன்னும் அவர்களின் உண்மை நிலையையும் எதிர்பார்ப்பையும் ஜனநாயக மரபுகளுக்குள் ஆட்படாத தன்மையையும் இனங்காட்டியுள்ளனர். அத்துடன் இவ்வமைப்புக்களுக்

www.tamilarangam.net

ளே இருந்த பல அணிகள் நிரா
கரிக்கப்பட்டு விட்டன. இப்பொழு
தும் இவை மக்களின் அமை
தி நோக்கி தாங்களே ஓர் இணைப்
புக்குள் அடக்கும் ஒன்றிணைவு
களில் முன்னேறிக் கொண்டி
ருப்பது தெரிகிறது.

உண்மையாக இதில்
இலாபம் பெற்றவர்களான
இந்தியா, இலங்கை பெற்ற அர
சு சார்பு நிலையினரையும் இயக்
கங்களாக இருந்து அரசியல்
கட்சியின் அந்தஸ்துக்கும் ஆட்
சியின் பீடத்துக்கும் அமர்ந்து
கொள்கை சார்பில் விடாது போ
ராடிக் கொண்டிருப் போரையும்
அன்றிலிருந்து இன்றுவரை தனிக்
காட்டுராசாவாகப் பவனிவர வி
ரும்பி அரசியற் சூழக்குள் தம்
மை ஆட்படுத்தாது சாய்கின்ற
பாட்டிற்கெல்லாம் இசைந்துக்
கொண்டு நேரத்திற் கொரு
கொள்கையாக தனது சொந்த
இலாபத்தின் பொருட்டு பொது
எதிரியை நிபந்தனை எதுவுமின்
றி நண்பனாக்கிய LTTE யும்,
சமூகமும் கொடாது கைச்சாத்
தும் இடாது, நோக்கமும் என்
னவென்று தெரியாத ஒப்பந்
தத்தின் நடைமுறையை தன
து சொந்தப் பதவியைப் பாது
காப்பதன் மூலம் நாட்டையே
போர்க்களமாக்கத் துடிக்கும் சனா
திபதி பிரேமதாசாவும் பேச்சு
வார்த்தைகளில், இந்தியாவால்
அடக்கி பணிய வைக்க முடியா
த அமைப்பைக் கொண்டு வந்
து வெற்றி கண்டதையும் நன்
மைகளாகக் கூறும் அதே வேளை
யில், மக்கள் மட்டும் பாக்குவெட்
டிக்குள் அகப்பட்ட பாக்குப்
போல் பரிதவிக்கின்றார்கள். இந்
த மக்கள் அடைந்த இவ்வள
வு கஸ்ரத்திற்குள் இவர்கள்
இனங்காட்டிய தலைமைகள்
இந்த மக்களுக்கான அமைதிக்
காக தாங்கள் குரோதங்களை
மறந்து தேசிய கவுன்சில் அ
மைக்கும் முயற்சியில் இறங்
கியிருப்பது மறைமுகமான மக்
களின் பயமே.

தமிழ் தேசிய இனத்
திற்கு அமைதி கிடைக்காததற்கே பல
காரணங்களுண்டு அவர்கள் ஆயு
தப் போராட்டத்தையே போராட்ட
மாகக் கருதியது. விடுதலைப் போர்
அவர்களுக்குள் திணிக்கப்பட்டது.
இப்போராட்ட நடவடிக்கைகள்
தொகைகளாயும் கொள்கை
களாயும் போட்டித் திணி

www.tamilarangam.net

ழாக்கள் போல் ஒருவர் மாறி ஒருவர் செய்தபோது, செய்தவர்களை உற்சாகப்படுத்தி ஊக்கம் கொடுத்து அதற்கு காரணம் இதன் விளைவுகளை அறியாமையே, முன்னைய அரசியற் போராட்டம் ஆயுதமாக மாற்றம் பெற்றதாக மக்கள் நினைத்ததும் மக்களின் சமூகக் கிளைமுறைகளுக் கேற்ப வர்க்கநிலை சார்ந்து இம்மக்களிலிருந்தே இவ்வியக்கங்கள் தோற்றம் பெற்று அவரவர் சார்புநிலையில் வளர்ந்தமையும், மக்கள் பார்வையாளராயும் போராளிகள் மட்டும் அமைப்பின் அங்கத்தவர்களாயுமிருந்து கொண்டமையும், மக்களின் நேரடி உறுப்புரிமை அமைப்புக்களுக்குள் செல்லாமையும், இயக்கங்கள் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தாமையாலும் இப்போராட்டம் நீண்டு சட்டிக்குள் குதிரையோட்டுவது போல் குடாநாட்டுக்குள்ளேயே வளர்ந்து கொண்டதாலும், யாருக்கு விடுதலை? விடுதலை என்றால் என்ன? என்ற பதங்களின் விளக்கங்கள் விரும்பியவாறு விரும்பியவாறு சொல்லப்பட்டதால் உண்மையான அமைதி யாரைக்கிட்ட வேண்டுமோ, அதற்கு கிட்டவும் அவர்கள் நெருங்க முடியவில்லை.

மேற்கூறிய அரசசா[...]ளும் தனிமனித அமைப்புக்களும் இயக்கங்களும் அரசியற் கட்சிகளும் தத்தம் நலன்களை பேணும் பொருட்டு தனித்து நின்ற காலத்தில் அடைய முடியாதவைகளை அவர்களின் ஒன்றிணைப்புப் பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை அமைப்புக்களும் அரசுகளும் அரசியல் கட்சிகளும் மக்களும் உணரக்கூடிய வாய்ப்பினை இந்த ஒப்பந்தத்தின் இரண்டாண்டு நிரூபித்துள்ளது. இதையுணர்ந்தாவது மக்களும் அரசியற்கட்சிகளும் பொது நன்மைகருதி உண்மையான சுதந்திரத்திற்கும் அமைதிக்கு போராட விட்டுக் கொடுப்புக்களுடன் ஒன்றுபட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சங்கரப்பிள்ளையின்
# சந்தி அரசியல் - ஆறு

வல்லிபுரம் வாத்தியாருக்கு இரண்டு மூன்று நாட்களாக சங்கரப்பிள்ளையரை சந்தித்து கதைக்காதது சாப்பிடாதது போல குறையாக இருந்தது. சங்கரப்பிள்ளையர் சயிக்கிளில் சீனி மூட்டை கட்டிக் கொண்டு வரும் போது விழுந்து முறிஞ்சு பிறைவேற் ஆஸ்பத்திரியில் படுத்திருந்தார். வாத்தியார், பிள்ளையர்... கடுமையாக யோசித்துக் கொண்டிருந்ததை கண்டதும்.

என்ன பிள்ளையர் கடுமையாக யோசிக்கிறீர் எலும்பு கிலும்பு முறிஞ்சு போச்சோ

முறிஞ்சாத்தான் என்ன நாட்டில ஆருக்கு என்ன எப்பிடி நடக்குது என்டு நம்பேலாமல் கிடக்கு.

என்ன பிள்ளையர் சடீல ஞானம் பிறந்தவர் மாதிரி, ஆஸ்பத்திரி அறையில தனிமையில இருந்து உமக்கு என்ன ஞானம் பிறந்திருக்கு.

இல்லை வாத்தியார் அமிர்தலிங்கத்தை சுட்டுப் போட்டாங்கள் ஆர் செய்தினமோ தெரியாது. அமிருக்கும் வேணும் அவரும் பொடியள் வந்தாப் பிறகு ஒதுங்கிறதை விட்டிட்டு திரும்பவும் வேட்டியை மடிச்சுக் கொண்டு வெளிக்கிட்டிட்டார். என்டாலும் அந்தாள் தமிழுக்கு செய்ததுகளை மறக்கேலாது நீங்கள் என்ன சொல்லுறியள் வாத்தியார்.

பிள்ளையர் உம்முடைய கதை முன்னுக்கு பின் முரண்படுகுது. எதையும் நியாயமாய் நிதானமாய் கதைக்கப் பழகும். அமிர்தலிங்கத்தின்ரை அரசியல் நடவடிக்கைகள் நல்லதோ கெட்டதோ என்டு நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லவரயில்லே. ஆனால் அவருக்கு உந்த தீர்ப்பில்லே எவரும் சனங்களுக்கு துரோகம் செய்ததையெண்டால் அதையதை சனம் தாக்கியெறியுங்கள். அமிர் கூட்டம் ஜெக்சனிலே நிண்டு மாறுவேடம் போட்டு வெளிநாடு போய் தமிழர் நிலையைச் சொன்னேன் எண்டு விக்கிரமாதித்தன் கதைகளெல்லாம் விட்டுப்பார்த்தினம் சனம் மசியயில்லே. ஒருபுறத்திலே ஒதுக்கி விட்டுதுகள் இதுதான் தீர்ப்பு. இதைவிட்டிட்டு தங்களுக்கு பிடிக்காததையை ஒத்து வராத அரசியல் கொள்கைக்காரரை கொலை செய்யிறது எண்கிறது மிகவும் கீழ்த்தரமான வேலை இப்படியே போனால் எதிர்காலத்திலே எலும்புக் கூடுகளைத் தான் இனி ஆள வேண்டிவரும்.

மற்றது என்ன சொன்னீர் ஆர் செய்தினமோ தெரியாதோ முழுப்பூசணிக்காயை எத்தனை நாளைக்கு சோந்துக்குள்ளே மறைக்கப் போறியள் உண்மைப் போல இன்னும் எத்தனை பேர் வெளிக்கிட்டிருக்கிறியள் பேப்பரை வாசிக்கிறியள் ஆனால் செய்திகளை விளங்கிறியள் யோகேஸ்வரன்ரை மனுசி போனை மொபடம் விசாரணையிலே வந்திருந்ததை அலோசியஸ விசு என்று சொல்லியிருக்கு. சிவசிதம்பரம் தங்கடைடை கதைக்க வந்திருந்து புலிகள் எண்டு சொல்லுகினம் அப்ப விசுவும் அலோசியசும் புலிகள் எண்டு வெளிப்படையாய் தெரியுது இதை விளங்கியும் விளங்காத மாதிரி ஏன் கதைக்கிறியள் எண்டு தான் விளங்கேல்லே. அ சரி உங்களுக்கும் இருக்கிறது ஒரு உயிர்தானே

சங்கரப்பிள்ளையர் மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் பேந்தப் பேந்த முழித்துக் கொண்டிருந்தார். மின்னலடிச்ச மாதிரி பின்னேயருக்கு வாத்தியாரிடம் கேட்டுத் தெரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டிய செய்தியொன்று பிள்ளைகளின் முன்னுக்கு வந்து நிண்டுது. ஒரு செருமலை போட்டுக் கொண்டு பிள்ளையார் கேட்டார்.

வாத்தியார் நம்மடை ஈரோஸ் தம்பியவை பார்லிமெண்ட் போகமாட்டம் எண்டு சொன்னதுக்கு ஏதோ ஏதோ காரணங்கள் கூறிச்சினம் இப்ப எல்லாம் கிடைச்சோ பார்லிமெண்ட் போகினம்.

வாத்தியார் கெக்கட்டம் விட்டுச் பெரிதாகச் சிரித்தார்.

என்ன வாத்தியார் நான் சீரியசாகக் கேட்கிறன் நீங்கள் சிரிக்கிறதுக்கு இதில என்ன இருக்குது.

இல்லைப் பிள்ளையார் நீரும் உம்மடைய கேள்வியளும் ஈரோஸ் தம்பியவையை பற்றி உமக்கு இன்னும் விளங்கயில்லை அது தான் சிரிச்சனான் விலாங்கு மீன் தெரியுமோ அது மீனுக்கு வாலையும் பாம்புக்கு தலையையும் காட்டுமாம். அந்த விளையாட்டுத் தான் இப்ப நடக்குது.

6வது திருத்தச் சட்டம் நீக்கப்பட வேணும் கைதிகள் எல்லோரும் விடுதலை செய்யப்பட வேணும் தமிழ் மக்களுக்கு அமைதியும் பாதுகாப்பும் ஏற்பட வேணும் என்ட பாணியில தான் பார்லிமெண்ட் போகமாட்டம் எண்டு சொன்னவை. இதில ஒண்டும் நடக்கையில்லை இப்ப போகினம் எண்டால் என்ன அர்த்தம் இவையின்ரை எஜமானர்களிட்டை இருந்து இவைக்கு மறுமொழி கிடைச்சிருக்குதெண்டு அர்த்தம். அதுகள் பாடு பெருந்திண்டாட்டம். பார்லிமெண்ட் போயும் என்ன சொல்லுறினம் இதைப் பிரச்சார மேடையாய் பாவிப்பம் ஆனால் விவாதங்களில கலந்து கொள்ள மாட்டம். எப்பவுமே அவை சொல்லுறது அவைக்கு மட்டும் தான் விளங்கும் இப்பமட்டும் என்ன மாற்றமே இதில இன்னுமொரு விசயம் பாரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன பேசின அரசியலும் காமினி பொன்சேகா வீட்டில சாப்பிட்ட விருந்துக்கும் என்ன தொடர் பெண்டு ஒண்டுமாய் விளங்கேல்லை.

வாத்தியார் பின்னடிக்கு சொன்னது பிள்ளையருக்கு உண்மையிலை ஒண்டுமாய் விளங்கயில்லை இருந்தாலும் பிள்ளையார் காட்டிக் கொள்ளையில்லை.

தலைகணியை எடுத்து கட்டிலை சாய்ச்சு வைச்சிட்டு இருப்பம் எண்டு நிமிர்ந்த பிள்ளையார் தலைகணிக்கு கீழ இருந்த கடிதத்தை கண்டதும்.

வாத்தியார் உங்களுக்கு ஒண்டு சொல்ல மறந்து போனன் என்ர மருமோனன் அதாவது சுட சிவந்தின்ர மோன் ஜேர்மனியிலையிருந்து கடிதம் போட்டிருக்கிறான் பெரிய கண்டுவி.

என்ன பிள்ளையார் என்ன விசேசம்.

அது வாத்தியார் பெரிய பகிடி இந்தியன் ஆமி வெளியேற வேணுமெண்டு உண்ணாவிரதம் வைச்சவையாம் இவனும் போய் இந்தியன் ஆமி வெளியேற எண்டு தொண்டை கிழிய கத்தோ கத்தெண்டு கத்திப் போட்டு வந்தவனாம். இந்தியன் ஆமியாவது போறதாவது எண்டு தான் பொடியனை நினைச்சிருக்கு இரண்டு மூண்டு நாளால பார்த்தால் இந்தியன் ஆமி ஒன்பது மாதத்தில வெளியேறும் எண்டு செய்தி அடிபடுகுதாம். பொடியன் உனக்கனுப்பப் போறாங்கள் எண்ட பயத்தில மிலிட்டரி பிடிச்ச பேயறைஞ்சவன் மாதிரி திரியிறானாம்.

தங்கடை காலிலை நிற்கத் தெரியாமை உணாரார் காலில நிண்டு அரசியல் பேசினவ உதே இன்னும் நடக்கப் போகுது பாரும் எதுக்கும் கெதியாய் மாத்திக் கொண்டு வீட்டை வாரும் எண்டு வாறு வாத்தியார் நடையைக் கட்டினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய வருமானத்துள் இனவாதம்

பழ - கருப்பையா

நமது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும், அன்னியச் செலவாணியை ஈட்டிக் கொடுப்பதில் முன்னணியில் திகழ்வதுவும், தேசிய வருமானத்தின் முக்கிய பங்கை வகுப்பதுமான தேயிலையின் உற்பத்தி அண்மைக் காலங்களில் என்றுமில்லாதவாறு பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது.

மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும் தேயிலைத் தோட்டங்களின் நிலப்பரப்பு 1987ல் 54156 எக்டேயர்களாக இருந்த 1988ல் 5[illegible]54[illegible] எக்டேயர்களாக வீழ்ச்சி அடைந்தது. இலங்கை அரச பெருந் தோட்டக் கூட்டுத் தாபனங்களின் தேயிலைத் தோட்டங்களின் நிலப் பரப்பு 1987ல் 48663 எக்டேயர்களாக இருந்து 1988ல் 47462 எக்டேயர்களாக வீழ்ச்சி அடைந்தது என 1988ம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் வெளியிட்ட அறிக்கையில் தேயிலை உற்பத்தி தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக தேயிலை ஏற்றுமதியில் 26 வீதமான தேயிலையை உற்பத்தி செய்து வந்துள்ள நமது நாடு இப்போது தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சியை எதிர்நோக்க காரணங்கள் என்ன?

தேயிலை விற்பனை விலையிலும் பார்க்க அதன் உற்பத்திச் செலவு அதிகரிப்பே காரணம் என்றும் இவ்வுற்பத்திச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செலவு அதிகரிக்க முக்கிய காரணம் மலையகத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வே காரணம் என அரசு நீலிக் கண்ணீர் வடிக்கிறது. தொழிலாளர்களின் உழைப்புக் கேற்ற ஊதியத்தை கொடுக்காது மறுத்து வரும் முதலாளித்துவ அரசு மலையகத் தலைமைகளுடன் சமரசம் செய்து கொள்ளவும் தேர்தல் மாயா ஜாலங்களுக்காகவும் சிறிதளவு சம்பள உயர்வினாலேயே உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது என்று கூறுவது கேலிக் கூத்தாகும்.

மலையகத்தில் நீண்ட காலமாக கடைப் பிடிக்கப் பட்டு வரும் பொருளாதார, குடியேற்றக் கொள்கைகளும், தேயிலை உற்பத்தியில் திட்டமிட்டு பெரும்பான்மை மக்கள் புகுத்தப் பட்டதுமே தேயிலை உற்பத்தி வீழ்ச்சிக்கான காரணங்களில் முக்கிய பங்கு வகிக்கின்றன

1972ம் ஆண்டு தோட்டங்களை அரசு சுவீகரித்தது. கம்யூனிஸ்ட் கட்சி, சம சமாஜக் கட்சி ஆகியவற்றுடன் கூட்டமைத்து அரசமைத்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசு நடாத்திய இச் சுவீகரிப்பால் மலையக மக்கள் சொல்லொணாத் துயருற்றனர். என்ன நோக்கத்திற்காக இச் சுவீகரிப்பு நடை பெற்றதோ அந் நோக்கம் நிறை வேற்றப் படுவதற்காக தோட்டங்களில் ஆங்காங்கே கோழி, ஆடு, பன்றி போன்ற கால் நடை வளர்ப்புக் கென சில தோட்டங்கள் கூறு போடப் பட்டன. ஜனவசம, நட்டாக் கூட்டுறவு. உசவ சமம போன்ற நிர்வாக அமைப்புக்களின் அடிப்படையில் இவை நிர்வகிக்கப் பட்டன. இந்நிர்வாக அடிப்படையில் தோட்டங்களில் செறிந்து வாழ்ந்த மலையக மக்களை சிதறடிப்பதற்காக பெரும்பான்மை

www.tamilarangam.net

மக்கள் பாரிய அளவில் வெளியேற்றப்பட்டனர். தேயிலை உற்பத்தியில் அனைத்து துறைகளிலும் பணியாற்றி வந்த மலையகத் தொழிலாளர்களை திட்டமிட்டு விரட்டும் பகிரங்க நடவடிக்கையாகவே அன்று இக்குடியேற்றங்கள் அமைந்தன.

இவை தொடர்ந்து நடை பெற்றது. தேயிலைத் தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் தோட்ட நிர்வாக பரிபாலன மட்டங்களில் அங்கம் வகித்த மலையக மக்களுக்கு பதிலாக அனுபவமற்ற சிங்கள மக்கள் திட்டமிட்டு புகுத்தப்பட்டனர். மலையக மக்கள் வகித்த தொழில்களுக்கு சிங்கள மக்களை புகுத்துவதிலேயே அன்றைய அரசு அக்கறையாயிருந்ததே தவிர இதனால் தேயிலை உற்பத்தியில் என்ன லாப நட்டங்கள் வரும் என்பதை கொஞ்ச கூட அக்கறை காட்டிக் கொண்டதாக தெரிய



வில்லை. இதன் விளைவு. அனுபவமில்லாதவர்கள் உட்புகுந்ததால் சரியான பராமரிப்பு இல்லாததால் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி ஆரம்பமானது.

சுவீகரிப்புக்கு பின்பு ஏற்பட்ட இக்குறைபாடுகளை சீர் செய்வதாக கூறிய யூ.என்.பி. அரசு 1979ம் ஆண்டு அனைத்து அரச தோட்டங்களும், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை, இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. ஆயினும் பழைய நடைமுறைகள் எதுவும் மாற்றப்படவில்லை. பத்து வருடங்களாகியும் ஒரு மாற்றமும் காணாத அதே வேளை மறைமுகமாக பழைய பல்லவி தொடர்கிறது. இன்றும் தோட்டக் காணி பெரும்பான்மை மக்களுக்கு பகிரப்படுகிறது.

தேயிலைத் தொழிலில் சிங்கள மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுபவமற்றவர்களாதலால் ஒழுங்கான வேலையை செய்ய முடியாதிருந்தனர். இதனால் நிரப்பந்த வேலைகளை இவர்கள் எதிர்த்தனர். இக் காலகட்டங்களில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சிக்கு மலையக மக்கள் புறக்கணிக்கப் பட்டதே காரணம் என உணர்ந்த சில தோட்டங் களில் சிங்கள மக்களை வெளியேற்ற முனைந்து முடியாது கைவிடப்பட்டன.

நீண்ட கால ஆயுளைக் கொண்ட தேயிலைச் செடிக்கு பசளை ஒழுங்காக இடப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால் மத்திய மலையக தோட்டங்களுக்கு அதாவது மலையக மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பசளை இடுவதில் அக்கறை காட்டப்படுவதில்லை. அதே வேளை மலையகமக்கள் குறைந்த அளவு காணப்படும். தாழ்ந்த மலைப்பகுதிகளில் உள்ள சிறிய தேயிலைத் தோட்டங்களுக்கு அதிக உரக் கவிப்பு நடை பெறுகிறது. மத்தியமலைப் பகுதித் தோட்டங் களில் பசளை இடுவதும் கவனிப்பும் குறைக்கப்படுவதால் தேயிலை உற்பத்தி குறையும், பின்பு இத் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன எனக் காரணம் காட்டி தேயிலை அழிந்தவுடன் மாற்றுப் பயிர்ச் செய்கை செய்ய வேண்டுமென்றும் அதற்கு மலையக மக்கள் அனுபவ மற்றவர்கள் என்றும் கூறி சிங்கள மக்களை குடியேற்ற அரசு முனையும். ஆகவே அரசாங்கமே திட்டமிட்ட குடியேற்றங்களை மேற் கொண்டு தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையை தீர்க்கப் போவதாகவும் அதற்காக இளைஞர்களுக்கு மலையகத் தோட்டங்களில் வேலை வாய்ப்பளிக்கப் போவதாயும் கங்கணங்கட்டிக் கொண்டு புறப்பட்ட யூ.என்.பீ அரசு அநேக தோட்டங்களில் தோட்ட உத்தியோகத்தர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதிகளில் சிங்கள ஊழியர்களை அளவுக்கதிகமாக நிரப்பியது. தேவைக்கதிகமான இவ்வூழியர்களுக்கான சம்பளம் மற்றும் இதரபடிகளும் தேயிலை வருமானத்திலிருந்தே கொடுக்கப்படுகிறது.

மத்திய வங்கி வெளிப்பிட்டுள்ள உற்பத்தி நிலப்பரப்பு குறைப்பு மத்திய மலையகப் பகுதிகளிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தேயிலை உற்பத்தி நிலப்பரப்பு குறைக்கப்படும் பகுதிகளில் காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப் போவதாய் அரசு கூறுகிறது. மலையக மக்கள் செறிந்து வாழும் மத்திய மலையக பகுதி தேயிலை உற்பத்தி குறைக்கப்பட்டு காடு வளர்க்க திட்டமிடப்படும் அதே வேளை மலையகத்தின் வேறு சில பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகளில் சிங்கள மக்கள் அரசின் உதவியுடன் ஈடுபடுத்தப்படுகின்றனர்

மேற் கூறப்பட்ட காரணங்கள்யாவும் தேயிலை உற்பத்தி வீழ்ச்சிக்கு காரணமாகும். நாட்டின் பொருளாதாரம் அழிந்து போனாலும் பரவாயில்லை மலையகமக்கள் சிதறடிக்கப்பட வேண்டும் மலையகம் எங்கும் சிங்கள மக்கள் குடியேற்றப்பட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கும் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் தேயிலை உற்பத்தி இன்னும் வீழ்ச்சி ஏற்படும். பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும். மலையகத்தில் அமைதி பாதிக்கப்படும். இவற்றிலிருந்து விடுபட நாட்டு முன்னேற்றத்தில் மலையகமக்களின் அமைதியில் வளமான எதிர்காலத்தில் அக்கறையுள்ளவர்கள் ஒன்றிணைந்து குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

www.tamilarangam.net

# சீதனம் ஐயா சீதனம்

## சிறுகதை

அக்கினி

வயல்கள் எங்கும் வெள்ளம் முட்டிக் காணப்பட்டது. நேரம் நாலு பத்து மணியாகியும் மார்கழி இருள் மூடிக் கொண்டிருந்தது. தவளைகள் தவில் கச்சேரி வைத்துக் கொண்டிருந்தன. மழை மெல்லியதாக தூறிக் கொண்டிருந்தது. மணியத்தார் காவு முழு வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு தலையில் தலைப்பாகையின் மேல் கடகத்தை நடனமாட விட்டு விட்டு கைகள் வீசி வீசி நடந்து கொண்டிருந்தார். சுன்னாகம் சந்தை நாட்களில் விடியற்காலை நாலு மணிக்கு சந்தைக்கு போகும் போதும் பத்து மணிக்கு திரும்பி வரும் போதும் தவறாமல் மணியத்தாரை தெருவில் காணலாம். மணியத்தாருக்கு விருத்தெரிஞ்ச நாளிலிருந்து சந்தைக்கு நடந்து போய் வந்து தான் பழக்கம்.

இண்டைக்கு வைத்திலை விற்ற காசோடை சேர்த்து இந்த மாதச் சீட்டுக் கட்டிப் போடலாம். கடைசி மாதச் சீட்டுக் காசோடை வீட்டிலை கிடக்கிற காசையும் சேர்த்து இருபத்தையாயிரம் வரும். இது தனுசியாவின்ரை கல்யாணத்துக்கு எந்த மூலைக்கு காணும், முதலிலை பத்தரிட்டை கொடுத்து நகைகளை செய்விப்பம் பிறகு பார்ப்பம். அவளுக்கும் வயது முப்பதாகுது. கல்யாண பேசி வந்தனையும் எழுபத்தையாயிரம் காசும் நகையும் கேட்கினம். கடவுளே எண்டு வைத்திலை இன்னும் ஒருவருஷத்துக்கு கண் முழிச்சிதெண்டால் எல்லாம் சரிப் பண்ணலாம். இப்போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தைக்கு நகையைச் செய்து போட்டு வட்டிக்கு கொஞ்சக் காசு எடுத்து சம்பந்த பகுதிக்கு கொடுத்தால் வெத்திலையை வித்துக் கட்டிப் போடலாம். மூத்தவள் அருசியாவுக்கும் உடம்பிடித்தானை கட்டி வைச்சனான். அவனுக்கும் ஆறு பிள்ளையள் அச்சு, வட்டியும் முதலும் சந்தைக்கு டையாய் நடந்து கட்டித் தீர்க்க இவ்வளவு நான் பிடிச்சிருக்கு. இதுவும் அப்பிடித் தான் சமாளிக்க வேணும். இன்னும் கடைசி விஜயாவும் இருக்கிறாள், ஓ. என்ன வாழ்க்கை எங்கடை பாடு பெரும்பாடு, பக்கத்திலை தைத்திலிங்கத்தார் எவ்வளவு மெசின் வைத்திருக்கிறார். மகளுக்கு சீதனமாய் லச்சக் கணக்கிலை அள்ளிக் கொடுத்து கல்யாணம் செய்து வைச்சார். நேற்று தோட்டத்திலை வேலை செய்யேக்கிலை வைரவி தன்ரை மகளுக்கு சடங்கு முடிஞ்சு தெண்டு சொன்னான். என்ன சீதனம் என்டு கேட்டால் விழுந்து விழுந்து சிரிக்கிறாள். சீதனமோ

அது என்ன நான் உங்க தோட்டத்திலை வேலை செய்யிறன், லச்சுமி வயலிலை களை பிடுங்கப் போட்டாள். இரண்டு பேரும் வேலை செய்தே ஒரு நேரக் கஞ்சி ஊத்தப் பத்தாது. காய்ச்சல் என்டு படுத்தால் இனிமை போடக் காசில்லை. சீதனம் என்ன சீதனம். எங்கடை சாதி சனத்திலை உதுகள் ஒண்டுமில்லை என்டு சொல்லுறன். எங்கடை இளசனங்கள் தான் கீழையுமில்லாமல் மேலேயுமில்லாமல் இடை நடுவிலை கிடந்து கொண்டு சாப்பாடு தண்ணி வெண்ணி இல்லாமல் கோயில் குளமெண்டு போகாமல் அடியன் அடிச்சு ஆடுக்கோ அள்ளி கொடுத்து ஆக்கிலைப்படுகுதுகள். ஏன் என்டு தான் விளங்கயில்லை? சனமெல்லாம் வெளிநாடெண்டு ஓண்டுக்கு வெளிக்கிட்டு சீதனம் ஆளை விலைக்குப் போகுது. இவை அள்ளிக் கொடுத்தால் நாங்கள் எங்க போறது. கைதியாய் வேண்டாவது அவள் விஜயா


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வுக்கும் எங்கையாவது பாக்க வேணும், என்னைப் போல ஒரு தோட்டக்காரனை கட்டவும் சம்மதிக்குதுகள் இல்லை. கௌரவக் குறைச்சலாம் இது என்ன கௌரவம் எண்டுதான் விளங்கயில்லை.

மனதில் பலவித யோசனைகளையும் ஓடவிட்டுக் கொண்டு நடந்து கொண்டிருந்த மணியத்தார் ஒருவாறாக வீட்டை அண்மித்தார். முதல் வேலையாக தேத்தண்ணி ஒரு மிடறு குடிச்சுப் போட்டு பத்தரிட்டை காசை கொண்டு போய்க் கொடுத்து நகையைச் செய்யச் சொல்ல வேணும் என யோசித்த வண்ணம் வீட்டுப் படலையை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்.

வீட்டு முற்றத்தில் வெள்ளம் எத்தி விளையாடிக் கொண்டிருந்த மூத்த மகள் அனுசியாவின் பிள்ளையள் அப்பா அப்பு வாறார் எண்டு கத்திக் கொண்டு வீட்டுக்குள்ளை ஓடினார்கள். சாய்மனைக் கட்டிலில் படுத்திருந்த பிள்ளைகளின் தகப்பன்

சனியன்கள் வெள்ளத்திலை விளையாடக் கூடாதெண்டு எத்தினை தரம் சொல்லுறது என்று எரிஞ்சு விழுந்தார்.

எப்ப தம்பி வந்த நீங்கள் மகளும் மகளும் வந்தவையோ என்றவாறு மணியத்தார் விறாந்தையில் கடகத்தை வைத்து விட்டு உள்ளே நுழைந்தார்.

மருமகன் எதுவும் பேசவில்லை முகத்தை திருப்பிக் கொண்டார்.

ஏதோ வில்லங்கம் போல கிடக்கெண்டு நினைத்த மணியத்தார் குசினிக்குள்ளை நுழைந்தார்.

மகள் அனுசியா அழுதவாறு சீலைத்தலைப்பால் துடைத்துக் கொண்டிருந்தாள். மனைவி தங்கமும் மற்றைய பிள்ளைகளும் ஆளுக்கொரு பக்கமாய் நின்றிருந்தனர்.

என்னடி தங்கம் என்ன எல்லாரும் மௌனிக்கிறியள் என்ன பிரச்சனை எனக்கும் சொல்லுங்கோவன்

www.tamilarangam.net

என்ன பிரச்சினை உலகிலை உலகத்திலை நடக்காத வெள்ளிடி எங்கடை வீட்டிலை விழுந்து கிடக்குது என்று தங்கமக்கா முணுமுணுத்தா

விசும்புக் கதையை விட்டுட்டு விசயத்தை சொல்லுடியப்பா மணியத்தார் எரிஞ்சு விழுந்தார்.

உங்கடை மருமகனுக்கு சீதனம் போதாதாம் தனுசியாவுக்கு கொடுக்கிற அளவு சீதனம் தனக்கும் வேணுமாம்.

மணியத்தாருக்கு காதினூடாக இடி ஒன்று இறங்கின மாதிரி இருந்தது தங்கமக்கா தொடர்ந்தா

தனுசியா அளவுக்கு சீதனம் தராட்டில் அனுசியாவையும் பிள்ளைகளையும் இங்கை விட்டிட்டு போகப் போறாராம்.

மணியத்தாருக்கு ஒன்று மட்டும் விளங்கியது நாங்கள் மானம் மரியாதைக்கு பயந்தனாங்கள் என்றதை இவர் எங்கடை பலவீனமாய் நினைக்கிறார் இந்த மானம் மரியாதை என்கிற வரட்டு கௌரவம்தான் மணியத்தாருக்கு புரியாத புதிராக இருந்தது. இவர் இப்ப விட்டிட்டுப் போனால், மணியத்தாரின்ரை மூத்தது நடத்தை சரியில்லாததாம், அது தான் அவன் விட்டிட்டு போட்டான் மற்றதுகள் எப்படியோ என்று சொல்லி இந்த ஊர்ச்சனம் பின்னாலை உள்ளது இரண்டுக்கும் கல்யாணம் நடக்க விடாதுகள் இப்படியே ஊருக்கு பயந்து உயிரை விட வேண்டியது தான் கண்டறியாத வாழ்க்கை என்று நினைத்துக் கொண்ட மணியத்தார் தான் இப்போதைக்கு பத்திரிடம் போகத் தேவையில்லை என்பதை புரிந்து கொண்டார்.

கொழுந்துகளை ஒழுங்காகப் பராமரித்தால் மற்றதுகள் இரண்டுக்கும் ஒரு வழி பிறக்கும் என்று உழைப்பில் நம்பிக்கை கொண்டவராய் தங்கத்தைப் பார்த்து

அனுமாரிக்கோ இருக்கிற இருபத்தையாயிரத்தை எடுத்துக் கொடு என

www.tamilarangam.net

நாத் நகைநகைக்கக் கூறி விட்டு பின் கொல்லை வழியாக கொழுந்து தோட்டத்துக்கு நடந்தார்.

# சிந்தனையின் பூர்வீகம்

கவிதை

சாந்தி

சிந்தனையை சுமந்தவண்ணம் - பூங்காவில்
சிலையாகும் கர்வத்தோடு விறைத்திருந்தான் - அவன்
சிந்தனைகள் எங்கும் சிரிப்பொலி
அவன் சிந்தனையை கொள்கைக் கலாச்சாரம் - மேலும்
உடைக்கவித்தது
வளரும் சிந்தனைகள் இம் மனிதர்கள் பற்றியே
ஆனாலும் - - - - - -
தனிமையிலே தன்னிறைவு கொண்டான்

ஒரு மாலை வேளை எங்கும் ஒரு பரபரப்பு
அது என்ன ?
இவனின் கனவா அல்லது சிந்தனையின் ஆரம்பமா?
ஓ இவையாவும் பரிணாமத்தின்
படிகள் என்பதை புரிந்து கொண்டான்
இவன் அப்பொழுது தான்
அழுக்குகள் இங்கே கோபவேசம் போட்டு
சுகாதாரம் பேசுகின்றன என எண்ணினான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மௌனத்தின் ஆழத்தில் பொங்கும்
கண்ணீரை புதைத்துக் கொண்டான்
அவன் மேனியில் ஆங்காங்கே - சில
அக்கினிச் சூடுகள்
தூய உடம்பில் துவாரங்களை சமைந்தபடி

வார்த்தை சொல்ல வாயில்லை என்று அழுகின்றான்
தன்னுடைய நினைவுகளை - தனது
இதயத்தில் உரசி இரத்தத்தில் கரைத்திருக்கிறான்
ஆதலால் மௌனமாக எழுதுகின்றான்
இன்று . . . . .

உண்மைகள் தவம் செய்யும் போது பொய்கள்
பறையடிக்கும்
கவியின் தவம் என்ன கலைந்தா விடும்.

''மதம் என்பது சமுதாய உணர்வு போத உருவமைப்புகளில் ஒன்று என்றும், வர்க்க சமுதாயத்தில் மேற்கோப்புகளில் (Superstructure) ஒன்று என்றும்'' 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யில் குறிப்பிடப்படுகிறது.

மேலும் 1844-ல் மக்களின் அபினி மதம் (Religion is the opium of the people) என்று காரல் மார்க்ஸ் கூறினர்.

மதம் என்பது சமுதாயம் அல்ல, சமுதாய உறவுகளுக்கான வளர்ச்சியில் மதம் சாருகிறது; சமுதாயத்தின் வர்க்க அமைப்பில் (Class Structure) மதம் சாருகிறது.

வெகுஜன மக்களைக் (Popular masess) கண்மூடிகளாக்குவதற்கும், வளராது தடைபடுவதற்தும் மதங்கள் கருவிகளாக்கப்படுகின்றன. இவ்வாறு செய்வதில் சுரண்டும் வர்க்கங்கள் அதிக சிரத்தைக் காட்டுகின்றன.

மார்க்சிச நாஸ்திக நூலிலிருந்து....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கழகம் தந்த பாடம்

எம்·எல்·நாஸ்

தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றினில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் பாத்திரம் மிகவும் முக்கியமானது 16-07 இல் உமாமகேஸ்வரன் கொலை செய்யப்பட்டு கழகத்துக்கு இது ஒன்றும் புதிய விடயமில்லாது இருப்பினும் கொலை செய்யப்பட்ட விதம் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். எமது போராட்டத்தை சீரழித்ததினில் கழகத்துக்கும் முக்கிய பங்குண்டு. உமா மகேஸ்வரனின் தலைமையின் வழி நடத்தலின் கீழ் தமிழீழ மக்கள் விடுதலை கழகம் சென்றடைந்த பாதையினை ஆய்வு செய்வதும் உமாமகேஸ்வரனின் மரணத்தை சீர் தூக்கி பார்ப்பதும் இன்று ஓர் முக்கிய விடயமாகும்.

புதிய தமிழீழப் புலிகளின் தலைவராக செயல்பட்டு வந்த உமா மகேஸ்வரன் இயக்கத்துக்குள் உருவான தலைமைத்துவ முரண்பாடு காரணமாக அதிலிருந்து ஒரு பகுதியினருடன் வெளியேறியதுடன் போராட்டத்துக்காக உதிரிகளாக செயல்பட்டு வந்த சிலரையும் இணைத்துக் கொண்டு தமிழீழ மக்கள் விடுதலை கழகம் [PLOTE] என்னும் பெயரில் இயக்கத்தை ஆரம்பித்தார். தமிழ் நாட்டு சாக்கடை அரசியலின் பாணியில் "கழகம்" என்று பெயர் சூட்டியதும் புரட்சிகர சக்திகள் என தம்மைக் காட்டிக் கொள்வதற்காக 'மக்கள்' என்னும் சொல்லை இணைத்துக் கொண்டதும் இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம்.

www.tamilarangam.net

குறிப்பிடத்தக்கவை முற்போக்கு சிந்தனையுடைய இளைஞர்கள் கழகத்துடன் தம்மை இணைத்து ஓர் முறையான விதைப்பை எதிர்பார்த்து நின்றனர். கழகமானது சர்வதேச நிலைப்பாடுகளையோ அல்லது போராட்ட அங்கீகாரத்தையோ கணக்கில் எடுக்காது தமிழீழத்தினை ஒரே இரவினில் அடித்து பெற்றுவிட முடியுமென்றும் கற்பனையை மக்கள் மத்தியில் மிகவும் ஆழமாக விதைத்தது உமாமகேஸ்வரன் தலைமையிலான இயக்கம். ஏதோ வானத்தில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்காக வந்த இயக்கம் என்பதே ஒருநாள் தமிழீழத்தை மீட்கப் போகிறோர்கள் போல் தோற்றமளித்தனர். இந்த பொங்கலுக்கு அடிக்கின்றோம், பொங்கலுக்கு தமிழீழம் கிடைக்கின்றது. போன்ற புலுகுகளை கூறி இலங்கைத்தீவுக்கப்பால் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கோடிக்கணக்கான பணத்தினை போராட்ட நிதியாக திரட்டிய இவர்கள் ஒரு தருப்பைக் கூட மக்களின் போராட்டத்துக்காக பயன்படுத்தினார்களா? என்பது சந்தேகம் தான்.

ஆனைக் கோட்டை பொலீஸ் நிலையம் போன்ற கொரில்லாத்தாக்குதல்களை நடத்தி தம்மை மக்கள் மத்தியில் பிரபலயப்படுத்திவிட்டு மக்கள் அணைப்புக்களைக் கூட்டி மக்கள் போராட்டத்தை நடத்தப் போவதாகக் கூறி ஆயிரக்கணக்கான இளைஞர்களை இணைத்துக் கொண்ட கழகத்துக்குள் முற்போக்குக்கும் பிற்போக்குக்கும் இடையிலான போராட்டங்கள் அகமும் புறமுமாக உருவெடுக்கத் தொடங்கியது கழக வளர்ச்சிக்காக உழைத்த முற்போக்கு சிந்தனை கொண்ட இளைஞர்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வழி வந்த உமாமகேஸ்வரன் கூட்டத்தினருக்குமிடையில் ஏற்பட்ட உட்கட்சி முரண்பாட்டை இல்லாதொழிப்பதற்காக கழகத்தின் செயலதிபர் உமாமகேஸ்வரன் மத்திய குழுவுக்கு தெரியாமலே உளவுப் படை ஒன்றை உருவாக்கி கழகத்துக்குள்ளிருந்த தனது அரசியல் கருத்துக்கு முரண்

www.tamilarangam.net

பாடுடைய போராளிகளை யெல்லாம் விவரிக்க முடியாத சித்திரவதைகள் செய்து இங்கில் தோப்புக்களில் நூற்றுக்கணக்கானவர்கள் புதைக்கப்பட்டனர் இவைகளை அறிந்து தட்டிக் கேட்க முற்பட்ட மத்திய குழு உறுப்பினர்களுக்கும் இந்தக் கதிதான் நேர்ந்தது கழகத்துக்குள் உட்கட்சி ஜனநாயகம் மறுக்கப்பட்ட நிலையினாலும் கழகத்தலைமையின் தவறான அரசியல் அணுகு முறையினாலும் கழகத்தின் வளர்ச்சிக்காக உழைத்து வந்த நூற்றுக்கணக்கான போராளிகள் கழகத்தை விட்டு கரவோடு கரவாக தப்பியோடினர். இவரில் சிலர் தம்மை தீப்பொறி குழுவினர் என்று கூறி கழகத்துக்குள் உருவாகியுள்ள அராஜக தன்மைகளை மக்கள் முன் அம்பலப்படுத்தும் பணியில் செயல்பட்டனர். கழகத்துக்குள் உமாமகேஸ்வரனின் தலைமை வெறி தலைமை வழிபாடுகள் இருந்ததென்பதற்கு உமாமகேஸ்வரனை பெரியப்பா என்று சொல்ல மறுத்தவர்களுக்கும் விவரிக்க முடியாத சித்திரவதைகளும் இங்கில் தோப்புகளும் தான் தக்கம் என்பதே போதுமானதாகும் வெளிநாடுகளில் போதைவஸ்து கடத்தல்களில் பிரபல்யம் வாய்ந்த ஒருசில தமிழ் நபர்களை உமாமகேஸ்வரன் கழகத்தின் தலைமைத்துவத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியாது அவர்களிடமிருந்து பணம் பெறுவதற்காக இணைத்து வைத்திருந்தனர் மலேசியா போன்ற நாடுகளில் போராட்டத்துக்கான பணம் வசூலிப்பதற்காக இதுவரை பேசிவந்த மாக்ஸிசம்-லெனினிசம் எல்லாத்தையும் ஒரு மூலையில் தூக்கி வைத்துவிட்டு தமிழனுக்கென்றொரு நாடில்லை ஆண்டபரம்பரை மீண்டும் ஆள நினைப்பது தவறா? என்ற மாதிரியான முறையில் பணத்தை வசூலிக்க முனைந்தார் கழகம் ஒரு பக்கத்தில் தனது பிரச்சார வெளியீடுகள், பத்திரிகை அறிக்கைகள் மூலம் ஐக்கிய முன்னணி பற்றிய பிரச்சாரத்தை முடுக்கி விட்டுக் கொண்டும் அதேவேளை மறுபக்கத்தில் ஐக்கிய முன்னணி உருவாகும் சாத்தியத்தை இழக்கும் வகை

www.tamilarangam.net

யில் தளத்தினில் ஏனைய இயக்கங்கள் மீதான தனது கடத்தல் தொழில் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் கழக இராணுவத்தை ஈடுபடவைப்பது போன்ற நடவடிக்கைகளின் மேலும் ஐக்கிய முன்னணிக்கான முயற்சிகளை சீர்குலைத்து வந்தார். இப்படியாக உமாமகேஸ்வரனின் சித்தாந்தத்திற்கும் அவரது நடைமுறைக்குமான இடைவெளி மலைக்கும் மடுவுக்குமானதாகக் காணப்பட்டது. உள்ளும் புறமும் பலவகையான எதிர்ப்புக்களையும் முரண்பாடுகளையும் உருவாக்கிக் கொண்ட உமாமகேஸ்வரனின் தலைமையிலான கழகத்துக்கு இயற்கை மரணமே உருவாகத் தொடங்கியது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட கழகம் திடீரென தமிழரின் தன்மானம் என்றெல்லாம் ஏதோ பேச ஆரம்பித்தது. கழகத்தை ஓர் இந்திய எதிர்ப்பு இயக்கமாக காட்டி அதில் இலாபம் தேட முனைந்தார். மாலைதீவு அரசாங்கத்தினால் நாடு கடத்தப்பட்ட கடத்தல் வியாபாரியுடன் இலட்சக்கணக்கான அமெரிக்க டாலர்களுக்கு கழக இராணுவத்தை கடத்தல் காரனுக்கு நாட்டைப் பிடித்துக் கொடுப்பதற்காக கைக்கூலி இராணுவமாக பாவித்தார். இவரது திட்டத்தின்படியே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. கழகம் இன்னும் உயிரோடுதான் இருக்கின்றது அது களங்கப் படவில்லை என்று மனப்பால் குடித்துக் கொண்டு கழகத்தை பாராளுமன்ற தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்தினார். ஆனால் மக்களோ இவர்களை புறங்கையால் தள்ளிவிட்டனர். நாங்கள் எல்லாம் இந்தியாவின் எதிர்ப்பாளர்கள் இனிமேல் எங்களுக்கு பிணக்குகள் உருவாக மாட்டாது என திடமாக நம்பிய உமாமகேஸ்வரனுக்கு ஏன்னிக்கொத்தில் இலங்கை இராணுவத்தின் உதவியுடன் புலிகள் நயவஞ்சகமான முறையில் மேற்கொண்ட தாக்குதல் உமாமகேஸ்வரனை மட்டுமல்ல கழகத்துக்குள் இருக்கும் இதர போராளிகளையும் சற்று சிந்திக்க வைத்தது. ஆனால் உமாமகேஸ்வரனை எம்மை மற்றவர்கள் தாக்கினாலும் நாம் எதிர்த் தாக்குதல் மேற்...

www.tamilarangam.net

கொள்ளக் கூடாது என்னில் அது இந்தியாவின் நிலையைப் பலப்படுத்தும் என்று ஒரு புதிய சித்தாந்தம் பேசினார் அவர் பேசிய சித்தாந்தம் அவரது உயிருக்கே உலைவைத்துவிட்டது உமாமகேஸ்வரன் போன்ற சிந்தனை செயல்பாடுகளைக் கொண்ட நபர்கள் எவ்வளவு தான் புகழின் உச்சிக்கு போனாலும் அழிவின் அதல பாதாளத்துக்கு வரவேண்டியவர்கள் தான், உமாமகேஸ்வரனும் கழகமும் எமது போராட்டத்துக்கு மட்டும் ஒரு பாடமல்ல உலகில் நடந்து கொண்டிருக்கின்ற. எதிர்காலத்தில் நடக்கப் போகின்ற போராட்டங்களுக்கு ஓர் பாடப்புத்தகம் தான்.

---


## அன்பான வாசகர்களே!

தங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் "வெகுஜனம்" பெரிதும் வரவேற்கிறது. ஆக்கங்களை செம்மையாக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவுக்கு அதிகாரமுண்டு

வெகுஜனம் சந்தா விபரம்

6 மாதங்களுக்கு 10 DM.

1 வருடத்திற்கு 20 DM.

ஜேர்மனி தவிர்ந்த மற்றைய நாடுகளுக்கு தபால்செலவு தனி.

அனுப்ப வேண்டிய முகவரி

"VEKUJANAM"
MITT WEG STR-21
4300 ESSEN-1, WEST GERMANY

www.tamilarangam.net

# சமர்ப்பணம்

கவிதை

சி.தி-சங்கர்

சொந்த முகவரிகளை தேடிய நீங்கள்
அன்பின் முகவரிகள்
எழுது முன் என் கல்லறையின்
முகவரிகள் ஆகிவிட்டீர்கள்
விடியும் முன் என் விழிகளை
மூடிக் கொண்டீர்கள்

ஓ... !.

நீங்கள் கொள்கையில்
கற்பாறைகள்
அதனால் தான் கல்லறையில்
தூங்குகிறீர்கள்
காப்பியமும் கல்வெட்டுகளும்
கறையானால் அழிக்கப்படும்
மனிதர்கள் காலங்களால்
அழிக்கப்படுவார்கள்
ஆனால் மனித இதயங்களில்
வாழும் நீங்கள்
எந்த வரலாற்றாலும் அழிக்க
முடியாதவர்கள்
உங்கள் கல்லறையில்
முளைத்ததால் தான்
நாணல் புற்களுக்கு கூட
தன் மானம் வந்தது

www.tamilarangam.net

என்கண்கள் கண்ணீர்
வடிக்கவில்லை
விடிய உள்ள தூரத்தை
பார்க்கின்றேன்
எமது தாயகம் விடிந்த
பின் நான் உயிரோடு
இருந்தால் மீண்டும்
செந் தோழர்களின்
கல்லறைக்கு
வருவேன் இன்று
செம்பூக்களை
உங்கள் பாதங்களில்
சமர்ப்பிக்கின்றேன்.

# உங்கள் பக்கம் உங்கள் பா

தங்கள் சஞ்சிகையை தொடர்ந்து படித்து வருகிறேன். அதில் வரும் ஆக்கங்கள் யாவும் எமது மக்களுடன் சம்பந்தப்பட்ட விடயமாக இருப்பதுடன் முற்போக்கானதாகவும் இருந்து வருவது பாராட்டுக்குரியதாகும். இறுதியாக வெளிவந்த யூன் - யூலை. 89 வெளியீட்டின் முன் அட்டைப்படம் (மறந்து போமோ யூலைப் படுகொலை) எமது தேசிய இனப்பிரச்சனையின் கடந்த காலத்தை ஞாபகப்படுத்தி உள்ளது. எமது பிரச்சனையின் இன்றைய நிலைமைகளை எழுதுவதுடன் நின்று விடாது எமது மக்கள் அனுபவிக்கப்

www.tamilarangam.net

போகின்ற எதிர்கால அபாயங்களையும் தீர்க்கதரிசனமாக எடு
ப்பதில் கூடிய அக்கறை செலுத்த வேண்டுமென கேட்டுக்
கொள்கிறேன் எனெனில் எமது மக்களின் பார்வைகள்
நிகழ் காலத்துடனேயே நின்று விடுகிறது. கடந்த கால
மும் எதிர்காலமும் தேவைப்படுவதில்லை இதுவே தான் எமது
தமிழினத்தின் அரசியல் வரலாறு இந்த தடைகளை தகர்த்
தெறிய சிறிதளவேனும் உங்கள் பேனா பயன்பட வேண்
டுமென வேண்டுகிறேன்

நி. ஜீபாஸ்கரன்
தோழர்

---

ඌව කම්කරු සරණ සේවන UWA

ஊவா தொழிலாளர் உதவி நிலையம்

**UVA WORKERS' AID CENTRE**

(AFFILIATED TO THE CO-ORDINATING SECRETARIAT FOR PLANTATION AREAS)

19/C, BADULUPITIYA ROAD, BADULLA. (Sri-Lanka) PHONE: 055-2098

Your Ref:

Our Ref:

20.7.1989.

வெகுஜனம்,

ஆசிரியர் குழு,

அன்புடையீர்,

ஆசிரியர் குழுவுக்கு தங்களின் வெகுஜன வெளியீட்டைப் பற்றி சிந்தனை 1989 ஆனி மாதம் இதழ் மூலம் அறிந்து கொண்டோம். எமது நிலையம் தோட்ட மக்கள் மத்தியிலே சமூக விழிப்புணர்ச்சியூட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. எனவே தயவு செய்து தங்களின் வெளியீடுகளை எமக்கும் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

தோழமையுடன்,

இணைப்பாளர்,

ஏ. கே. வேலவன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்கள் வெளிச்சம் பத்திரிகையை தொடர்ந்து படித்து வருகிறேன். பல முற்போக்கான ஆக்கங்கள் இடம் பெறுகின்ற அதேவேளை கையெழுத்துப்பிரதியாக இருப்பதால் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. இதனால் சிலவேளைகளில் சில ஆக்கங்களை பிழையாக விளங்கிக் கொள்ள வேண்டி உள்ளது. இதில் கூடிய கவனம் எடுத்து பத்திரிகையை எழுத்துப்பிழையின்றி செழுமைப்படுத்துவது வளர்ச்சிக்கு உகந்தது என கருதுகிறேன். சங்கரப்பிள்ளையார் இருமாதத்துக் கொரு தடவை நமது மண்ணுக்கு எங்களை கொண்டு சென்று விடுகிறார். தங்கள் யூன்-யூலை 89 வெளியீட்டில் கடலோடி நண்பர்களுக்கு என்னும் தலைப்பில் பதில் விளக்கமொன்று அளித்துள்ளீர்கள். இவர்களுக்காக உங்கள் பத்திரிகையின் பக்கங்களை ஒதுக்கி இருப்பது வீண் என்றே எண்ணுகிறேன். இவர்கள் நேற்று எழுதிய கருத்துக்களை இன்று பிழை என்கிறார்கள் தெரியாமல் எழுதிவிட்டோம். வருந்துகிறோம் என்கிறார்கள் இவர்களின் கருத்துக்களை ஏற்பதா விடுவதா என்பது தெரியாமல் விழிக்க வேண்டி உள்ளது. ஆக்கதாரர்கள் பரீட்சைக்கு எழுதும் மாணவனைப்போல தயார் செய்து எழுத வேண்டுமென்கிறார்கள். தாங்களோ அகப்பட்டதை எல்லாம் எழுதி விட்டு பின்பு வருத்தம் தெரிவித்து குழப்புகிறார்கள் எல்லா இயக்கங்கள் மீதும் குற்றங்களை மட்டும் அள்ளி வீசுகிறார்கள். அப்படியானால் மக்களுக்கு யார் தலைமை ஏற்பது என்ன தீர்வு என்றும் எதுவும் எழுதுவதில்லை. மொட்டையாக முற்போக்கு சக்திகள் என்று விடுகிறார்கள் யார் இந்த முற்போக்கு சக்திகள் என்று எது வித விளக்கமும் இல்லை.

இப்படிமக்களை குழப்பும் இவர்களுக்கு நீங்கள் பக்கங்களை ஒதுக்குவதை விட ஏதாவது பிரயோசனமான ஆக்கங்களை அந்த இடங்களில் எழுதினால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்போன்ற வாசகர்களுக்கு நன்மை பயக்கும் என்றே கருதுகிறேன்.

எஸ். சிவவேல்
நாரான்பேக்.

---

யாழ்ப்பாணம்.
இலங்கை.
4. 8. 89.

ஆசிரியர்,
'வெளிச்சம்'
கொ. கொக்குவில்.

அன்புடையீர்,

இன்று தங்கள் 'வெளிச்சம்' என் கைக்கு வந்து சேர்ந்தது. அதிலுள்ள மகிழ்வும், பெருமிதமும் அடைந்தேன். அட்டைப் படம் [illegible] பார்த்தும். இந்த புதுமை நிறைவுக்கும் வகையில் அமைந்திருந்தது. இத்தகைய [illegible] சிறந்த தலைக்கு அட்டைப் படங்களை தாங்கள் கொடுக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் இதனைக் காண்பது சரியான வகையில் இந்த புதுமை நிறை அட்டைத் [illegible].

தொடர்ந்தும் மென்மேலும் பத்திரிகையின் பொலிவுக்கு உழைப்பு வாய்க்கவென அன்புடன் வேண்டுகின்றேன். நன்றி.

அன்புடன்,
[illegible]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண் விடுதலையாளர்களுடன் பேட்டி



(இந்திய கலாச்சாரம் என்பதே கொடுமைதான். அதுவும் பெண்களுக்கு ஏற்பட்ட கலாச்சார இடி என்பது பெண்களின் மானுட மதிப்பையும், ஜீவிதத்தையும் தரை மட்டமாக்கியே விட்டது எனலாம். இந்திய சமூக அமைப்பில் எங்கும் எதிலும் பெண்ணடிமைத்தனமே தலைவிரித்தாடுகிறது. சாதிக் கொடுமையைவிட, ஏழ்மையை விட கொடுங் கோன்மையானதாகவே பெண்ணடிமைத் தனம் விளங்கி வருகிறது.

தனி மனிதன் முதல் சமூகம்வரை, அரசிலிருந்து அனைத்துக் கட்சிகள் வரை, அடுக்களையிலிருந்து அலுவலகம் வரை, கடவுளிலிருந்து மதம் வரை பெண்ணடிமைத்தனமே பேணப்பட்டு வருகிறது, என்பது நிதர்சனமான உண்மை. இந்த விஞ்ஞானகாலத்திலும் ஆண்கள் இன்னும் நாகரீகமடையவில்லை என்பதற்கு இந்திய ஆணாதிக்க சமுதாயமே கண்கூடாகும்.

இந்தியாவில் பெண்களுக்கு மிகமிகப் பெரிய முதல் பிரச்சனை சமத்துவம் என்பதல்ல. அவர்கள் வாழ்வதென்பதே பெரும் பிரச்சனையாக உள்ளது.

கடந்த ஆண்டு இந்தியப் பழமை விரியச் செருக்கானது உடன்கட்டை என்னும்சமூகத் தீங்கான கேடு கெட்ட செயலுக்கு, இராஜஸ்தானில் ரூப்கன்வாரை இரையாக்கி சதிமாதா கோயிலை உருவெழுப்பியது. மானுடஉலகம் அந்த கொடூர அயோக்கிய செயலுக்கு இன்று வரை பரிகாரம் காணமுடியாத நிலையில், மீண்டும் சதிமாதா கோயில்கள் எழும்ப பூரிசங்கராச்சாரியார் தன் திமிர் வேண்டுகோளை பிற்போக்கு தினவெடுத்து விட்டிருக்கிறார்.

மனித அத்துமீறல்களை மதக்கலாச்சாரமாகத்திணிக்கும் அந்த மனித முண்டத்தை, பழமைக்காட்டு மிருகத்தை கூண்டில் அடைக்க மாநில-மத்திய எந்த அரசுக்கும் துணிவே இல்லை. அந்த மானுடத் துரோகிக்கு வாய்ப்பூட்டு போட அரசுக்கு சட்டம் இல்லை. மத சுதந்திரம் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் காட்டுமிராண்டி பூரிசங்கராச்சாரியின் பழங்கூச்சல் உரக்கத்தானே செய்யும்?

பூரிக்கு எதிரான சிலசில சலசலப்புகளே நாட்டில் தோன்றி ஓய்ந்தன. முடிவான எதிர்ப்புக்கு, வெற்றி பெறும் வரை தொடர் போராட்டத்திற்கு எத்தரப்பினரும் முன்வரவில்லை என்பது நடைமுறையதார்த்தம். சில பெண் விடுதலையாளர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டோம் அவற்றை உங்களுடன் பரிமாறிக் கொள்கிறோம்.)

www.tamilarangam.net

சரசுவதி ராசேந்திரன்
துணைப் பேராசிரியர்
இராணி மேரிக் கல்லூரி

பொதுவாக மனித குல வாழ்க்கைக்கும், முன்னேற்றத்திற்கும் ஒவ்வொரு மதமும் எதிரிதான் என்றாலும் கூட, பெண்களின் வாழ்க்கைக்கும் முன்னேற்றத்திற்கும் அவைமிகக் கொடுமையான எதிரிகள் என்பது வெளிப்படை. ஆதிக்கச் சமுதாயம் என்ற நிலத்தில் வேருன்றி பிற்போக்குத்தனமான சிந்தனைகள் கவைக்குதவாத தத்துவங்கள், மூடச்சம்பிரதாயங்கள் சடங்குகள் என்ற விழுதுகளால் பெண்களை இறுக்கிப்பிடித்து அவர்களின் வலிமையையும், சக்திகளையும் உறிஞ்சிக் குடித்து விட்டு, பின் அவர்களைப் பார்த்து கை கொட்டிச் சிரித்து, எள்ளி நகையாடுவதுதான் இவற்றின் செயல்பாடுகள்.

இந்த நிலை எல்லா மதங்களுக்கும் பொருந்தும். மிக அதிகமாக பொருந்துவது, உலகின் மிகப் பழமையான (!) மதம் என்று மதவாதிகளால் போற்றி புகழப்படும் "அர்த்தமுள்ள இந்து மதத்திற்குத்தான்." மனித சமுதாயத்தையே பிறப்பின் அடிப்படையில் கூறு போட்டு, அதற்கு பொய்யான நியாயத்தை கற்பித்து, அந்த பிறப்பின் அடிப்படையிலேயே ஏற்றத்தாழ்வையும் ஏற்படுத்தி நிலைப்படுத்தி வைத்திருக்கும் தன்மை வேறெந்த மதத்திலும் காணக்கிடைக்காத சிறப்புத் தன்மை.

அதே, பிறப்பு என்கிற விபத்தின் காரணமாகவே பெண் மக்களை இழிவுப்படுத்தி உயிரற்ற ஜடப் பொருளுக்கும், விலங்கினங்களும் கீழானவர்களாக வைத்திருக்கும் பாங்கு இந்து மதத்தில் போற்றுதற்குரிய தன்மை. எனவே இப்படிப்பட்ட மதங்களின் பிரதிநிதிகளாக விளங்கும் மதவாதிகளும், தலைவர்களும், சமூதாய பிற்போக்கு வாதிகளாக பெண்களை சீர்குலைக்கும் "போபால்" வாயுக்களாக இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆச்சரியமெல்லாம், இவர்கள் இப்படி பேசுவதை, இந்த சமுதாயம், 21ஆம் நூற்றாண்டிற்கு பெண்களையும் சேர்த்து அழைத்துக் கொண்டு செல்லத் துடிக்கும் குறிப்பாக பெண்களும் எப்படி பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான்.

காஞ்சிக்கோ... சிருங்கேரிக்கோ இப்படிப்பட்ட விஷத்தைக் கக்குவது என்பது புதிதான ஒன்று அல்ல. திருமணமாகாத பிராமணப் பெண்களை, வாழைமரத்திற்குத் திருமணம் செய்து வைத்துப்பின் அந்த வாழை மரத்தை வெட்டி போட்டு விட்டு, பெண்ணை வீட்டில் விதவையாக வைத்துக் கொண்டாலும் கொள்ளலாமே தவிர எக்காரணம் பற்றியும், பிராமணப்பெண்களை வேற்று சாதிக்காரனுக்குத் திருமணம் செய்து வைக்க கூடாது என்று ஒலித்த தென்னாட்டுத் தெய்வத்தின் குரலை கன்னத்தில் அடித்துக் கொண்டு பக்திப்பரவசமாகி ஒப்புக் கொண்டவர்கள், இன்று பெண்கள் உடன்கட்டை ஏறுவது தவறல்ல என்ற வடநாட்டுத் தெய்வத்தின் அருள் வாக்கையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இது என் "சொந்தக்கருத்தல்ல" புண்ணிய நூல்களில் கூறப்பட்டிருப்பதுதான் என்று தன்னுடைய பலத்தையும் பூரி அவர்கள் வெளிப்படையாக கூறியிருக்கிறார்.

எனவே இத்தகைய மதவாதிகளை ஆதரித்துக் கொண்டிருக்கும் ஆதிக்க சக்திகளையும், அந்த சக்திகளுக்கு அடிப்படையாக இருக்குப் தத்துவங்களையும் தரைமட்டமாக்க வேண்டும். மனித குலத்தை அழிக்கத் தோற்றுவிக்கப்பட்ட "மதம்" எனும் விஷப்பூண்டை தேடி அழித்து மீண்டும் முளைக்கா வண்ணம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மற்றெல்லா முயற்சிகளும்புண்ணுக்குபுனுகு பூசும் முயற்சியே.

சாந்தகுமாரி ராசகோபாலன்
இந்தியப் பொதுவுடமை கட்சி
தமிழ்மாநில மாதர்சங்க
துணைச் செயலாளர்

உடன்கட்டையேறுவதைஆதரித்து பேசி வருகிற பூரி சங்கராச்சாரியின் போக்கு கண்டிக்கத்தக்கது. இது ஏதோ ஒரு மதவாதியின் கருத்தல்ல பெரும்பாலான மதவாதிகளின் சிந்தனை இதுவே. இதில் வெளிப்படையாக சொல்கிறவர் பூரி சங்கராச்சாரியர் என்பதைகவனிக்க வேண்டும் காலம் காலமாக மதவாதிகள் பெண்களை இரண்டாம் தரப் பிரஜையாக்கி பல வித சமூக கட்டுபாடுகளை விதித்து வருவதன் பிரதிபலிப்பே இது.

இன்றைய இந்திய மாதர்களின் பெரும் பிரச்சனை பெண்களே, தங்களைபிணைத் திருக்கும் சங்கிலி இதுவென அறியாத நிலையும், அலங்கார பதுமைகளாக பிள்ளைப்பெற்று போடும் யந்திரமாக இருப்பதை பெரிய கவுரவமாக எண்ணி, புரட்சிகர சமூதாய கடமைகளில் ஈடுபடுவதென்பதை ஏதோ வேலையற்ற ஒரு சில பெண்களின்கடமையென எண்ணும் மடமையும், இந்த நிலைக்கு அவர்களை ஆட்படுத்தியுள்ளது இந்த முதலாளித்துவ சமூகமே ஆகும்.

இத்தகைய தளைகளிலிருந்து விடுபட்டு "நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிக்கும் திமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்ட பெண்கள் மக்களோடு இணைந்து ஒட்டு மொத்தமாக சமூக மாற்றத்திற்காக போராடும் போதுதான் இத்தகையப் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

ரீட்டம்மா
சென்னை

மதத்தின் அடிப்படையில் கலாச்சாரங்கள் இருக்கும் வரையில் இப்படிப்பட்ட சாமியார்கள் இருக்கத்தான் செய்வார்கள். இன்னும் சொல்லப் போனால் பெண்களுக்கு இழைக்கக் கூடிய துரோகங்களை மறைப்பதற்குத்தான் இந்த மடாதிபதிகளே இருக்கிறார்கள். இதில் பூரி சங்கராச்சாரியார் மட்டுமல்ல அனைத்து மாடதிபதிகளுமேபங்காரு அடிகளார் உட்பட இப்படித்தான்

www.tamilarangam.net

பெண்கள் மத்தியில் போர்க்குணமிக்க ஒரு விழிப்புணர்ச்சி வராத வகையில் இப்படிப்பட்ட சாமியார்கள் இருக்கத்தான் செய்வார்கள். இவர்கள் அட்டூழியங்கள் தொடரத்தான் செய்யும்.

கடந்த 1981-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 1000 பேர் ஆண்கள் என்றால் பெண்கள் 933 பேர்தான் என்று அரசின் அறிவிப்பு தெரிவிக்கிறது. ஏற்கெனவே பெண்களின் விகிதாச்சாரம் குறைந்து வருகின்ற நேரத்தில் "அமினோசென்டிரிஸ்" என்ற கருவி மூலம் கருவில் இருப்பது ஆணா பெண்ணா என்றறிந்து, பெண் என்றால் கருவிலேயே கொன்று விடும் நிலை உருவாகியுள்ளது. இது தவிர வரதட்சணைக் கொடுமை வேறு; அனைவருக்கும் பொதுவான சத்துணவு பற்றாக் குறையினாலும் பெண்களின் உயிரிழப்புகள் வேறு. இதில் உடன்கட்டையும் சேர்ந்தால் அய்யோ! எண்ணிப்பார்க்கவே பயமாக இருக்கிறது.

காடுகளில் வன விலங்குகளையும், இயற்கைச் சூழலையும் பாதுகாக்க இயக்கம் நடத்துவது போல் பெண்ணினத்தின் அழிவையும் தடுத்து நிறுத்த இயக்கம் நடத்த வேண்டியுள்ளது. காட்டில் உள்ள சிங்கம், புலி போன்ற மிருகங்களின் அழிவை நிறுத்த இயக்கம் நடத்த வேண்டும் என்று கூறுபவர்கள், வனவிலங்கு பாதுகாப்பு வார விழா கொண்டாடுபவர்கள் பெண்களின் அழிவை தடுத்து நிறுத்த என்ன செய்ய போகிறார்கள்?

பசுவதையை தடை செய்ய வேண்டும் என்று சொன்ன பூரி சங்கராச்சாரி உடன்கட்டை ஏறச் சொல்வது மட்டும் எந்த ஜீவகாருண்யம்? தாய்க்குலத்தின் பெருமை பேசும் அரசியல்வாதிகள், மற்றும் அரசு கட்டில் உள்ளவர்கள் இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? இராமாயணத்தில் இராமன் சீதையை தீக்குளிக்க செய்வதை நியாயப்படுத்துபவர்கள் தங்கள் மனைவியை அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்று சொல்வதற்கு எந்த உத்திவாதமும் இல்லைதான்.

முதலில் பெண்கள் தானும் ஒரு மனிதப் பிறவி என்பதை உணர வேண்டும்-அவர்களைப் பற்றி முதலில். அவர்களே தெரிந்துக் கொள்ள வேண்டும் எந்த ஒரு விஷயத்தையும் தவறு என்றால் அதை அடித்து சொல்லும் துணிவு வேண்டும் இவைகள் அனைத்திற்கும் மேலாக சமூகத்தைப்பற்றிய தெளிவான பார்வையும். சுரண்டுகிற கும்பல்களின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஆணாதிக்கத்திற்கு எதிராகவும் தயங்காமல் குரல் கொடுக்க வேண்டும். சமூகமாற்றம் தான் இறுதியான தீர்ப்பு. அதற்காக அமைப்பு ரீதியாக அணிதிரள வேண்டும்.

கோமதி கண்ணப்பன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
இந்திய தேசிய மாதர்
சம்மேளன மாநில
துணைச் செயலாளர்

பூரி சங்கராச்சாரியார் ஒரு சரியான பிற்போக்குவாதி. அவர் சதியை ஆதரிப்பதோடு தீண்டாமைக்கும் மீண்டும் உயிர் கொடுத்துள்ளார். மதகலவரத்தை தூண்டுபவர் என்று குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட வேண்டுமென்று எங்கள் மாதர் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது. பெண்களின் மீதான அனைத்து சமூகக் கொடுமைகளையும் கண்டித்து எமது இயக்கம் போராட உள்ளது. ஒட்டு மொத்த சமுதாய மாற்றமே பெண்களின் பிரச்சனைகளுக்கு தீர்வாக இருக்க முடியும்,

இரா. கவுதமி

மதுரை

இந்தியாவில் இதுவரையிலும் இனிமேலும் நடந்து-நடக்கப் போகிற அரசியல் கிளர்ச்சி என்பதெல்லாம் மனுதர்மத்திற்கும்-மனித தர்மத்திற்கும் நடக்கும் பெரும் போராட்டமே என்று தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். தந்தை பெரியார் அவர்களின் கூற்றை இன்று நாம் சமூக, பொருளாதார, அரசியல் விவகாரங்களில் உரசிப்பார்த்தால் அந்த நடைமுறை உண்மையை இனங்கண்டு கொள்ளலாம். இந்திய அரசியல் சட்டம் என்ற பார்ப்பன நவீன மனுதர்ம சட்டம் எல்லோருக்கும் மத சுதந்திர உரிமையை அளித்திருக்கிறது. சாதி இழிவும், பெண்ணடிமைக்கேடும் அதில் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதே உண்மை.

பொதுவாகவே மதம் என்பது மக்களை மடமையிலாழ்த்தி ஆதிக்க சக்திகளை அடையாளம் கண்டு கொள்ள விடாமல் தடுக்கும் அறியாமை இருளில் அவர்களை நிரந்தரமாய் வைத்திருக்கவே உண்டாக்கப்பட்ட ஒரு சாதனம் என்றாலும், குறிப்பாக இந்தியாவின் இந்து மதத்தின் வீச்சு மிகக்கொடுமையானது. சிந்தனா சக்தியும், தன்மான உணர்வு மற்ற மாக்களாகப் பிறவியிலேயே மனிதர்களைப் பேதப்படுத்தி அடிமையில் ஆழ்த்தும அதன் தன்மை மிகக் குரூரமானதே. இந்து மதம் இம்மண்ணில் ஆண்டாண்டு காலமாய் வேரூன்றப் பட்டிருக்கும் மக்களின் அடிமைத்தனம் குருட்டு நம்பிக்கைகளாலும், நிலை பெற்று விட்ட சடங்கு சம்பிரதாயங்களாலும் மட்டுமன்றி இந்திய அரசியல் சட்டத்தாலும் பாதுகாக்கப் பட்டே வருகிறது.

இந்த பாதுகாப்பான, அங்கீகரிப்பான நிலையில் ஒரு மதத்தின் மடத்தலைவரிடமிருந்து இது போன்ற கேவலமான நாகரீக உலகம் அருவருக்கத்தக்க விஷ வார்த்தைகளைத் தவிர வேறு என்ன நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? பாம்பின் வாயில் இருந்து விஷம் வராமல் தேனும் பாலுமா வெளியேறும்? எங்களுடைய ஆதங்கமெல்லாம், இதே பூரி சங்கராச்சாரி தாழ்த்தப்பட்டவர்களை கோவிலுக்குள் விடக் கூடாது என்று கூறிய நிலையில், நாடு தழுவியோ, ஆங்காங்கோ பூரி சங்கராச்சாரியை எதிர்த்து கூவ ரொட்டி இயக்கமாவது, ஆர்ப்பாட்டமாவது. பூரியின் கொடும்பாவி எரிப்பாவது நடைபெற்றது. ஆனால் எங்களுக்கு?

இந்த மடாதிபதிகள் இப்படியெல்லாம் அறிக்கை விடுவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்கு இந்த¹ மத அமைப்பு மட்டும் காரணமில்லை. ''மதத்துவேஷப்பிரச்சாரம் மக்கள் மனதைப் புண்படுத்தும்,'' அவர்களைப் புரட்சிப்பாதைக்கு வரவிடாமல் தடுத்து விடும் என்ற வாதத்தின் போர்வையில் மத அமைப்புகள் இங்கு வேரூன்றி ஆட்சி செய்து கொண்டிருப்பதையே காணமறுக்கும் அனைத்து முற்போக்கு சக்திகளும் இதற்கு முழுப் பொறுப்பாவார்கள்.

பொதுவாக இந்த இந்து மத கலாச்சாரத்திற்கு எதிராக மனித நேயம் கொண்ட அனைவரும் போராட வேண்டியது இங்கே நிர்பந்தம் என்றாலும், குறிப்பாக பெண்களுக்குஇந்தப் போராட்டச் சுமையும்-தேவையும் அதிகமாக இருப்பதையே பூரியார்கள் பெண்களுக்கு வலியுறுத்துகிறார்கள்.

இந்த கலாச்சாரப் போராட்டம் நடத்த நாடு தழுவிய ஒன்றுபட்ட பெண்கள் இயக்கம் தேவை. பெண்கள் கட்சி மாச்சரியத்தில் தனிமைப்பட்டுவிடாமல், பொதுப் பிரச்சனைகளில் ஒன்று கலக்கும் மனப்பாங்கும் தேவை. இப்படியான எண்ண அலைகள் தான் தற்போது எங்களிடம் அலைபாய்ந்து வருகிறது.

**இரா.தேன்மொழி**
**திருப்பூர்**

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் இன்னமும் வரலாற்று ரீதியிலான பொருளாதார, சமூக, கலாச்சார ஒடுக்குமுறைகளுக்குட்படுத்தப்பட்டேயிருக்கிறார்கள். நம் சமூகத்தின் உழைக்கும் பெண்கள் (இங்கு நான் குறிப்பிடுவது பெண்கள் தத்தமது வீடுகளில் செய்யும் அங்கீகாரமில்லாத உழைப்பை அல்ல) ஓரளவு பொருளாதார சுதந்திரம் பெற்ற நிலையிலும் சமூக, கலாச்சார ஒடுக்குமுறைகளுக்குள் தொடர்ந்தும் சிக்குண்டு கிடப்பதானது, வெறும் பொருளாதாரா சுதந்திரத்தினால் பெண் விடுதலையைப் பெற்றுவிட முடியாது என்பதையே காட்டுகிறது. உழைக்கும் பெண்கள் வீடுகளிலும், பணியிடங்களிலுமாக இரு முனைகளிலும் ஒடுக்கப்படுவதையே அனுபவத்தில் பார்க்கிறேன். மேலும், உழைக்கவென வரும் பெரும்பாலான கீழ், மத்திய தர வர்க்கப் பெண்கள், வர்க்க உணர்வுள்ளவர்களாகவோ, சமூகப் பிரக்ஞையுள்ளவர்களாகவோ இல்லை. மிகச் சிலரே சுயசார்பு உணர்வுள்ளவர்களாக இருக்கின்றனர். சாராம்சத்தில், தத்தமது வீட்டின் பொருளாதாரச் சுமைகளைக் குறைக்கவென்றும், நமது எதிர்காலப் பொருளாதாரத் தேவைகளைக் கருத்தில் கொண்டும் (வரதட்சணை முதலியன) நிர்ப்பந்தம். காரணமாகத்தான் உழைக்க வருகிறார்கள் என நான் கருதுகிறேன். பொருளாதாரசுதந்திரம் பெண் விடுதலையை நோக்கிய முதல் படிக்கல்லாக மட்டுமே அமைய முடியும்.

வீட்டுக்குள்ளேயே தம்மை முடக்கிக் கொண்டிருக்கும் பெண்களைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. பெண் பிரதமர்களைக் கண்ட தென்னாசிய நாடுளிகல் மிக மோசமான பெண் ஒடுக்குமுறைகளும், அடக்குமுறைகளும் இன்னமும் நிலவி வருவது, பெண்களின் மேம்பாடு பொருளாரத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

பெண்ணுரிமை வாதமானது வரலாற்று, கலாச்சார ஸ்தூலமான நிகழ்வுகளையும், அறிவுபூர்வமான உணர்வுகள், பிரக்ஞைகள், நடவடிக்கைகளின் நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளதால், பெண் ஒடுக்குமுறையை ஒழிக்க ஒரு தனித்தீர்வை முன் வைக்க முடியாது.

பெண்கள் தெளிவாக அரசியல் சமூக; உணர்வுடன், அரசியல், போராட்டங்களில் ஸ்தாபன ரீதியாக ஈடுபடுவது பெண் விடுதலையை நோக்கிய இரண்டாவது படிக்கல்லாகும். அரசியல் ஈடுபாடானது, அவர்களுக்கு போராட்ட, போர்க்குண இயல்புகளைக் கொடுப்பதோடு, அவர்களைக் கலாச்சார மாயைகளிலிருந்து விடுவிக்கும் என நான் நம்புகிறேன்.

ஒரு சோஷலிச சமுதாயத்தில், உழைப்பின் எல்லா நிலைகளிலும் பெண்கள் பங்குபற்றுவது மூன்றாவது படிக்கல்லாக அமையும்.

சோஷலிச சமுதாயத்தின் தோற்றத்தின் பின்னும், பெண்கள் தொடர்ந்து போராட வேண்டிய நிலை இருக்கும். ஆண் மேலாதிக்கத் தன்மையையும், மரபு ரீதியான, கலாச்சாரரீதியான பொய்மைகளைப் போக்குவதற்கு பெண்கள் கடும்மையான போராட்டம் நடத்த வேண்டித்தான் இருக்கும்.

அரசியல் ரீதியான பெண்களின் பங்கு பெண்களுக்கு மட்டுமல்ல,ஒட்டு மொத்தமான மனிதகுல மேம்பாட்டுக்கும் விடுதலைக்குமே இன்றியமையாத ஒன்று. பெண்கள் ஒடுக்கப்பட்டிருக்கும் வரை ஆண்களும் இருட்டுக்குள் தான் இருப்பார்கள்.

இன்றைய சமூக அமைப்பில் அரசியலில் ஈடுபடும் பெண்களைப் பல கோணங்களிலிருந்தும் பார்க்கிறார்கள்.

முதலாவதாக, முக்கியமானதாக, விபச்சாரிகளாகப் பார்க்கும் கோணம். இந்தக் கோணல் பார்வைக்கு இரை போடுவதுபோல தமிழகத்தில் தேசிய, பிராந்தியக் கட்சிகளின் மாதர் அணிகள் செயல்படுவது வேதனைக்குரியதே. உதாரணமாகஅ இ.அ.தி.மு.கவின் ஜெயலலிதாவைக் குறிப்பிடலாம். ஜெயலலிதாவின், தனி மனிதச் சீரழிவின் சிகரமாக, அவர்களின் உடன்கட்டைப் பேச்சு அமைந்திருந்தது. சதி ஒழிப்பு பற்றிய நடவடிக்கைகளில் நாடு முழுவதும் உள்ள பல்வேறு பெண்கள் அமைப்புகள் தீவிரமாக ஈடுபட்டிருந்த சமயத்தில், ஜெயலலிதாவின் 'உடன்கட்டை-சோகம்' கேலிக்குரியதாகிவிட்டிருந்தது. இக்கட்சிகளின் மாதர் அணிகள், தாம் சார்ந்து நிற்கும் கட்சிகளின் முதலாளித்துவ நோக்கங்களையும், ஆண் மேலாதிக்க சமூகஅமைப்பைக் கட்டிக் காப்பதற்குமே துணை நிற்கின்றன. அங்கொன்றும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கொன்றுமான அவர்களுடைய சீர்திருத்த மேடைப் பேச்சுக்களால் ஸ்தூலமாக எதையும் சாதித்து விட முடியாது.

கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் அதன் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண்களை, கட்சி நடவடிக்கைகளுக்கெனப் பயன்படுத்தும் போக்குத்தான் பரவலாகக் காணப்படுகிறது. அடிப்படையான சமூக மாற்றத்தை உதட்டளவில் மட்டுமே வைத்திருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தோழர்கள் தமது மனைவிகளை, சகோதரிகளை, தாயை, மகள்களை வீட்டுக்குள் சிறைப்படுத்தி வைத்திருக்கும் தேக்க நிலைதான் இன்றைய நிலை. இதற்குக் காரணம் வரலாற்று ரீதியிலான ஆண் மேலாதிக்க உணர்வேயன்றி வேறெதுவாயிருக்கமுடியும்? இத்தேக்க நிலையை, உணர்வுபூர்வமாக அரசியலில் ஈடுபடும் பெண்கள் உடைத்தெறிவார்கள் என்பது நிச்சயம்.

இரண்டாவதாக, அவர்களை வினோதப்பூச்சிகளாகப் பார்க்கும் பார்வையைக் குறிப்பிடலாம். அவர்களுடைய போராட்ட உணர்வை ஜீரணிக்கவும் முடியாமல் அவர்களைச் சகமனிதர்களாக ஏற்றுக்கொள்ளவும் இல்லாமல் தவிக்கும் ஒரு மனோபாவம். இந்தப் பார்வையும் பெண்களுக்குத் தீங்கு விளைவிப்பதில்தான் போய் முடியும்.

மூன்றாவதாக, பெண்களுக்கு அரசியல் அவசியமில்லை என வாதிடும் ஒரு ஆணாதிக்கப் பார்வை. பெண்கள் தம்மை திருப்திப்பதன் மூலந்தான் , இப்பார்வைகளை அகற்ற முடியும்.

'கற்பு' என்பது பெண்களை ஆண் வழிச் சமூக அமைப்புக்குள் நிரந்தரமாகச் சிறைப்படுத்துவதற்காகப் பூட்டப்பட்ட ஒரு மாய விலங்கு. கற்புக்கரசிகளாகவும், பத்தினிகளாகவும் "சிறப்பிக்கப்பட்ட இந்தியப் பெண்கள் மிக இழிவான மோகப் பொருளாகத் தம்மை தம் சம்பந்தப்பட்ட ஆண்கள் கையாளவே அனுமதித்துள்ளனர். கற்பு என்பது பெண்கள் மீதுமட்டும் வலிந்து திணிக்கப்பட்டிருப்பதும், விபச்சாரத்துக்குத் துணைபோகும் ஆண்கள் சமூக அங்கீகாரத்துடன் உலவி வருவதும், முதலாளித்துவ அமைப்பில் இருக்கக்கூடிய ஒருதலைபட்சமான நியாயந்தான். பெண்களென்றாலே 'காக்கப்பட வேண்டியவர்கள்' என்ற கருத்து இருக்கிறது. பெண்களை அடிமைகளாக வைத்திருப்பதற்கு இந்தக் 'காத்தல்' எனும் கோட்பாடு ஒருகருவியே. கற்பழிப்புச் சாத்தியமும், பல்வேறு வகையிலான பாலுணர்வு ரீதியான ஆதிக்கமும் இந்தக் கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைகின்றன. கற்பை நிராகரித்து ஒழுக்கத்தைப் பொதுவில் வைக்க வேண்டும் என்பேன் நான்.

மதமானது ஆண் வழிச் சமுதாய குடும்ப அமைப்பை நிலைநிறுத்தும் வலிமையான சக்திகளில் ஒன்றாக விளங்குகிறது. மதச் சார்பான குடும்பச் சட்டங்களும், சடங்குகளும் இதற்காகவே பயன்படுகி[ன்]றன. மரபு வழி வந்த மத[த்]தினால் பெண்களே அதிக[ம்] பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். மதங்களும், கலாச்சாரமு[ம்] ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து, உயர்ந்த நோக்கங்களையும், உன்னத லட்சியங்களையும் பிரஸ்தாபித்துக்கொண்டு, பெண்களை அவ[ர்]கள் அறியாமலேயே, இரண்டாந்தர மனிதர்களாகக்குறுக்கிவிட்டிருக்கும் கைங்கரியத்தை வெகு அழகாகச் செய்து விட்டிருக்கின்றன..


பூரி சங்கராச்சாரியாரி[ன்] உடன் கட்டையை நியாயப்படுத்திய பேச்சை, பெண்ணுரிமைவாதி என்ற முறையி[ல்] மட்டுமல்ல, மனித , நேய[ம்] கொண்டவள் என்ற முறையிலும் கடுமையான கண்டனத்துக்குட்படுத்துகிறேன்.

அதேபோல, சிதம்பரத்தி[ல்] தீட்சிதர் குடும்பங்களில் நடந்த பால்ய விவாகங்களையும் ஆ[ட்]சேபனைக் குட்படுத்துகிறேன்.

இவையிரண்டும் மதரீ[தி]யான பெண் ஒடுக்குமுறைக்கு இருஉதாரணங்கள். இரண்டிலுமே பெண்களின் உணர்[வு]கள் ஒடுக்கப்படுகின்றன. கொலைச் செயலுக்கு ஒப்பா[ன] உடன்கட்டை ஏற்றுதலை ஒ[ரு] தெய்வீகத்தன்மை கொண்[ட] கண்கொள்ளாக் காட்சியா[க] மாற்றிவிடும் சக்தி மதத்துக்[கு] உண்டு. சிறுவயதிலேயே தன[து] 'வாழ்க்கைத் துணை' இறக்[க] நேரிட்டால் பெண் குழந்தைகள் (மட்டும்) 'விதவை'களாகவே வாழ்ந்து சாகும் ம[ன]தாபிமானமற்ற கொடுமையை மதத்தினால் நிகழ்த்திக்காட்[ட] முடியும் என்பதுதான் க[ச]க்கூடான உண்மை

நன்றி: சங்கமி

-இரா. தேசிகன், S.பாஸ்கர[ன்]
ஜீவ[...]





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகக் கண்ணாடி

## இந்து மகா சமுத்திரத்தினில் அமெரிக்காவின் அக்கறை

மிகவிரைவில் நடைபெறவிருக்கும் இந்துசமுத்திரம் பற்றிய சர்வதேச மாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்து சமுத்திர பிராந்தியத்தினிலுள்ள பெரும்பான்மை நாடுகள் தமது பிராந்தியத்தை அமைதிப் பிராந்தியமாக பாதுகாக்கும் செயல்களை தன்னால் ஏற்கமுடியாதாம். அமைதிப்பிராந்தியத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் இந்து மகாசமுத்திரத்தினில் வல்லரசுகள் பிரசன்னமாகி இருக்கமுடியாது. அதனால் அமெரிக்கா ஏற்கனவே உள்ள தளங்களையும், எதிர்காலத்தினில் தனது நாசகார நடவடிக்கைகள் விபரீதமடையப் போவதையும், இப்பிராந்தியத்தினிலுள்ள தனது செல்வாக்கினையும் கைகழுவ வேண்டி வருமென அஞ்சுகின்றதாம்.



www.tamilarangam.net

# ஐக்கியப்படுவோம்
# போராடுவோம்
# அமைதி காண்போம்